பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 6 சனிக்கிழமை (23-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 268

## அடுத்த மாத நடுப்பகுதியில் புலிகளின் பதில் கிடைக்கும்!

### யாழ்ப்பாணத்தில் நோர்வேத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.23

வடக்கு-கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் வரைவுக்கான விடுதலைப் புலிகளின் பதில் அடுத்த மாத நடுப்பகுதியில் கிடைக்குமென நம்புகிறோம் என்று நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு ஒருநாள் விஜயம் மேற்கொண்டு நேற்றுக்காலை வந்த அவர் செய்தியாளர்களிடம் பேசினார். யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனுடன் அவர் கலந்துரையாடல்களை நடத்தினார்.

செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறுகையில்:-

புலிகளின் பிரான்ஸ் கலந்துரையாடல் உள்ளகக் கலந்துரையாடலாகவே அமைந்துள்ளது. இக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடுசெய்து உதவியுள்ளோம். கலந்துரையாடலின் இறுதி நாள் எமது தரப்புப் பிரதிநிதியாக சொல்ஹெய்ம் அல்லது வேறு ஒருவர் கலந்துகொண்டு புலிகளின் சட்ட அறிஞர்களுடன் பேசுவர்.

சமாதான முயற்சிகள் விரைவில் பூர்த்தியடையமாட்டா. இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)



ஹான்ஸ் பிரட்ஸ்கர்

### நல்லூர் பின்பகுதியில் புனரமைக்கப்பட்ட

## தியாகி திலீபனின் நினைவுத் தூபி திங்களன்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.23

நல்லூர் ஆலயப் பின்பகுதியில் அண்மையில் மீளப் புனரமைக்கப்பட்ட தியாகி திலீபனின் நினைவுத் தூபியை நாளைமறுதினம் திங்கட்கிழமை திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை திலீபன் ஞாபகார்த்தக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து நல்லூர் ஆலய வீதியில் உண்ணாவிரதம் இருந்த லெப்டினன்ட் கேணல் திலீபன் இந்திய அரசின் உதாசீனத்தினால் உயிர்த்தியாகம் புரிந்தார்.

அவரது நினைவாக 1990ஆம் ஆண்டு நல்லூர் ஆலயத்துக்குப் பின்புறமாக மேற்குப் பக்கத்தில் நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு யாழ். குடாநாடு இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டபோது தியாகி திலீபனின் நினைவுத் தூபியும் மிலேச்சத்தனமாக இடித்து அழிக்கப்பட்டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதை அடுத்து தியாகி திலீபனின் நல்லூர் நினைவுத் தூபியைப் புனரமைப்பதற்கு தியாகி திலீபன் ஞாபகார்த்தக் குழுவினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தற்போது அந்தப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. நாளை மறுதினம் புனரமைக்கப்பட்ட நினைவுத் தூபியைத் திறந்து வைப்பதற்கும் அவர்கள் நடவடிக்கைகளை, ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். (ம-ரி-86)

### பாதுகாப்பு ஏற்பாடுகளை சீர்குலைப்பதன் மூலம்

# ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்து விளைவிக்க அரசுக்குள் சிலர் சதி!

### பொலீஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் அவரே தெரிவிப்பு!

கொழும்பு, ஓகஸ்ட் 23

**தனது பாதுகாப்பு ஏற்பாடுகளை மிக மோசமாகச் சீர்குலைத்து தனது உயிருக்குத் தீங்கு விளைவிக்க அரசாங்கத்திலுள்ள அதிகாரம் வாய்ந்த சிலர் சதிசெய்கிறார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் குற்றஞ்சாட்டியிருக்கிறார். தனது பாதுகாப்பு அதிகாரிகளைக் கைது செய்தும் உடல்ரீதியாகத் துன்புறுத்தியும் இச்சதிக்கு பொலீஸ் அதிகாரிகள் துணை போகிறார்கள் எனவும் அவர் கூறுகிறார்.**

பொலஸ்மா அதிபர் ரி. ஈ. ஆனந்தராஜாவுக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதம் ஒன்றிலேயே ஜனாதிபதி இக்குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்.

பொலீஸ் படையின் தலைவர் என்ற முறையில் இதுதொடர்பாக எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கை என்ன என்பதை தனக்கு அறிவிக்கும்படியும் பொலஸ்மா அதிபரை அக்கடிதத்தில் ஜனாதிபதி கோரியிருக்கிறார்.

தனது மாளிகைக்கு மிக அருகி

(16 ஆம் பக்கம் பார்க்க)

### ஓட்டோ சாரதி மீது பம்பலப்பிட்டியில் தாக்குதல்

கொழும்பு,ஓக.23

பம்பலப்பிட்டியில் ஓட்டோ சாரதிமீது ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் எனக் கருதப்படும் சிலர் மேற்கொண்ட தாக்குதலில ஓட்டோ சாரதி ஒருவர் படுகாயமடைந்தார். அவர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் பம்பலப்பிட்டி லெயார்ட்ஸ் வீதியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

லெயார்ட்ஸ் வீதியில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ராஜேந்திரன் ரொசான் என்பவரின் ஓட்டோவை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட உத்தரவை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு மூன்று மாதங்களில் நாட்டில் மீண்டும் பாரிய யுத்தம்

### அனுரா பண்டாரநாயக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஓக.23

நாட்டின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் வழங்கி வரும் தகவல்களின்படி இன்னும் இரண்டு மூன்று மாத காலத்திற்குள் மீண்டும் பாரிய யுத்தமொன்றை நாடு எதிர்கொள்ள வேண்டிவரும். அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

- இவ்வாறு, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி ஆலோசகருமான அனுரா பண்டாரநாயக்க, பதுளை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பதுளை மாவட்டக் கூட்டம் நடைபெற்றபோதே அனுரா பண்டாரநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றிய போது தெரிவித்ததாவது:-

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று அரசு கூறிவந்தபோதிலும், சமாதானம் இன்றோ, நாளையோ கிடைத்துவிடப் போவதில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை; விசாரணைகள் இன்னும் முடியவில்லை

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பாக விசாரணைகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் யாழ். நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணை யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்று இடம்பெற்ற சமயம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக அறிக்கை ஒன்றை யாழ்.பொலீஸார் சமர்ப்பித்தனர்.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்றும் -

விசாரணைமுடிவடைந்த பின்னர் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதாகவும் - அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம-3-5)

## 1996 இல் கைதாகிப் பின் காணாமற்போன நால்வர் சார்பில் ஆட்கொணர்வு மனுக்கள்

### யாழ்.மேல் நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல்

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்.குடாநாட்டை இலங்கை இராணுவம் கைப்பற்றிய சமயத்தில் - 1996 இல் - அங்கு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனவர்கள் என்று கருதப்படும் நான்கு தமிழ் இளைஞர்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நேற்று நான்கு ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

1996 ஜூலை மாதம் யாழ்ப்பாணம் பாஷையூர், கொய்யாத்தோட்டம் மற்றும் கொடிகாமம் பகுதிகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் எனக் கூறப்படும் அன்ரனி அனிஸ்டன் (பாஷையூர்), ஆசீர்வாதம் பெர்னாண்டோ ஜெயகாந்தன் (பாஷையூர்), வேலுப்பிள்ளை உதயகுமார் (கொடிகாமம்), மைக்கல் பேர்னாட் ஜோன்ஸன் ஆகியோருக்காக அவர்களின் பாதுகாவலர்கள் சார்பில் இந்த ஆட்கொணர்வு மனுக்கள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டன.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் சட்டத்தரணி எம்.ரெமடியஸ் இந்த மனுக்களைத் தாக்கல்செய்துள்ளார்.

சம்பந்தப்பட்டோர் கைதுசெய்யப்பட்ட சமயம் அந்தந்தப் பகுதி இராணுவ முகாமுக்குப் பொறுப்பாகவிருந்த இராணுவ அதிகாரி, பலாலி இராணுவத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இன்னமும் அரசமைப்பு ரீதியாக தனித்தனியானவையே!

### பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.23

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அரசமைப்பு ரீதியில் தனித்தனியானவையே. இதனைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் வடக்கு-கிழக்கு தனி மாகாணம்தான் என்று பிரதமர் கூறி வருகிறார்.

- இவ்வாறு கூறுகிறார் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-கண்காணிப்புக் குழுத் தலைவர் திங்களன்று சம்பூரில் சந்தித்துப் பேச்சு

திருகோணமலை,ஓக.23

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளரை, இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் திங்களன்று சந்தித்துப் பேசவுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின தற்போதைய நிலை குறித்து ஆராயும் முகமாகவே இச்சந்திப்பு இடம்பெறவிருப்பதாக கூறப்படுகின்றது.

இச்சந்திப்பு மூதூர் கிழக்கு, சம்பூரில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும். கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டெலிவ்சனுடன் பிரதித் தலைவரும் கலந்துகொள்வார்.

விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், அரசியல் பொறுப்பாளர் திலக் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொள்வர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### நோர்வே தூதுவருக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் விளக்கம்

# கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் குடாநாட்டில் புனரமைப்புப் பணிகளுக்கென ரூ.6 கோடி செலவு

## ஆனால், மக்கள் வாழ்வில் எதுவித முன்னேற்றமும் இல்லை!

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ். மாவட்டத்தில் கடந்த சுமார் ஒன்றரை ஆண்டுகளில் - புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் - புனரமைப்புப் பணிகளுக்கென 6 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆனால், மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. சமாதானத்தால் குடாநாட்டு மக்கள் குறிப்பிடத்தக்க எந்தப் பயனையும் பெறவில்லை.

நேற்று யாழ்ப்பாணம் வந்த நோர்வேத் தூதுவருக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் குடாநாட்டு நிலைமை பற்றி இவ்வாறு விளக்கமளித்துள்ளது.

குடாநாட்டின் தற்போதைய நிலைமையைத் தெளிவுபடுத்தும் அறிக்கை ஒன்றையும் இணையம் நோர்வேத் தூதுவருக்கு வழங்கியுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற கொடூரமான யுத்தம் காரணமாகப் பல லட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களிலும் சுமார் 22 ஆயிரம் குடும்பங்கள் தனியார் வீடுகளிலும் ஏனைய இடங்களிலும் வசித்து வருகின்றன.

1990ஆம் ஆண்டில் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிய இம்மக்கள் உயர் பாதுகாப்பு வலயம், மிதிவெடி அகற்றப்படாமலுள்ளமை போன்ற காரணங்களால் மீளக்குடியமர முடியாமல் அகதி முகாம்களிலும் தனியார் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களின் பிரதான தொழில்களான விவசாயம் மற்றும் மீன் பிடித் தொழில் என்பவற்றை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதிக்கிறார்களில்லை.

இதனால் வேறு எத்தகைய வருமானங்களும் இன்றி அரசினால் வழங்கப்படும் நிவாரணத்தை நம்பியே தமது வாழ்க்கையைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு இவர்கள் உள்ளாகியுள்ளனர்.

அரசினால் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகளும் போதிய அளவில் உரிய நேரத்தில் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் அகதிமுகாம்களில் உள்ளவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.



நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ரீசர் (நடு) யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனை (இடது) சந்தித்து உரையாடினார். நோர்வேத் தூதரக செயலாளர் தோமஸ் ரெக்கிலன்ட்டும் உடன் காணப்படுகிறார்.

படையினரால் உருவாக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரச்சினைகளால் 57 கிராம சேவையாளர் பிரிவுகள்கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

நோர்வேயின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுப் பல மாதங்கள் கடந்த நிலையிலும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த சுமார் 45 ஆயிரம் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25ஆயிரம் ரூபாவும் வீட்டு நன்கொடை நிதியாக 75ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்று அரசு தெரிவித்திருந்தது.

ஆனால், மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் சுமார் 6 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 25ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய குடும்பங்களுக்கு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் யாழ் குடாநாட்டில் மீளக் குடியமர்ந்த 95 ஆயிரம் குடும்பங்கள் பற்றி அரசோ அன்றி வேறு பொது நிறுவனங்களோ கவனத்தில் எடுப்பதில்லை.

வன்னியில் இருந்து ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணம் வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கே தற்போது முன்னுரிமை அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதனால், உள்ளூரில் இடம்பெயர்ந்து பின்னர் மீளக்குடியமர்ந்தவர்கள் எந்த உதவிகளுமற்ற - கையறு - நிலையில் இருக்கின்றனர்.

வெளிநாட்டு தொண்டர் அமைப்புக்களினால் வழங்கப்படுகின்ற உதவிகளும் அனைவருக்கும் சரியாகச் சென்றடைவதில்லை. அவர்கள் பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறையும் திருப்திகரமானதாக இல்லை.

தேவையற்ற - அநியாயமான - பாதுகாப்புக் கெடுபிடிகள், சீரற்ற ஆட்சி, மேலிருந்து கீழ்நோக்கிய திட்டமிடல்களால் மக்கள் பங்களிப்பில்லாத திட்டங்கள், திருப்தியற்ற மதிப்பீடு என்பன போன்ற காரணங்களால் கடந்த ஒன்றை ஆண்டில் பல கோடி ரூபா நிதி புனரமைப்புக்கு எனச் செலவழிக்கப்பட்ட போதும் குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இது தொடர்பான சில ஆலோசனைகளை நாம் முன்வைக்க விரும்புகின்றோம்.

★ புனரமைப்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்வதற்காக கிராமியமட்டத்தில் துடிப்பான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

★ இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் மீன்பிடி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் விவசாய நிலங்களை விவசாயிகளிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

★ புனரமைப்பு, புனர்வாழ்வு முயற்சிகளுக்கும் பயன்களுக்கும் இடையிலுள்ள இடைவெளியைக் குறைக்க மக்களின் பங்களிப்புக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும்.

★ புனர்வாழ்வு நடவடிக்கைகளால் பாதிப்படைந்த மக்களின் குறைகளைக் கேட்டுச் சீர்செய்வதற்கு மாவட்ட குறைகேட்பு அதிகாரி ஒருவரை நியமிப்பதோடு, புனர்வாழ்வுப் பணிகளைச் செயற்படுத்தும் கட்டமைப்பில் அரச சார்பற்ற பிரதிநிதிகளிற்கு உரிய இடம் வழங்கவேண்டும்.

★ அரசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கான தேவைகளை உணர்ந்து செயற்பட்டு வருகின்றபோதும் அதில் காணப்படும் வளப்பற்றாக்குறை காரணமாகத் தமது சேவையைப் பூரணமாக வழங்கமுடியாது திண்டாடுகின்றன.

மக்களுக்கு தொடர்ந்தும் சேவையைச் செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களில் காணப்படும் வளப்பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-5)

## இராணுவத்திற்கு அமெரிக்கா கண்ணிவெடி அகற்றும் பயிற்சி

### புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்து

கொழும்பு,ஓக.23

இலங்கை இராணுவத்திற்கு கண்ணிவெடிகள் அகற்றும் பயிற்சி வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் அமெரிக்கா கையெழுத்திட்டுள்ளது.

அமெரிக்க அரசின் சார்பில் அமெரிக்கத்தூதரகப் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் எப்.என்.வில்சனும் இலங்கை அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஒப்பந்த விதிகளின் படி, நான்கு அமெரிக்கர்கள் உட்பட ஆறு நிபுணர்கள் இலங்கை இராணுவத்தினருக்கு கண்ணி வெடிகள் அகற்றுவதில் பயிற்சியளிப்பர். இப்பயிற்சிக்கு சுமார் 22 கோடி ரூபா செலவிடப்படும்.

நாளை ஆரம்பமாகும் இப்பயிற்சி அடுத்த வரும் பெப்ரவரி வரை தொடரும்



கண்ணி அகற்றும் பயிற்சி ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் அமெரிக்கத் தூதரக பொறுப்பதிகாரி ஜேம்ஸ் எவ்.என்.வில்சனும் கைச்சாத்திடுகின்றனர்.

## தமிழக மீனவர்கள் மறியல் போராட்டம்

தமிழக மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்துத் தமிழக மீனவர்கள் நேற்றுக் காலை நாகபட்டினத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எட்டுக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் ஒன்று திரண்டு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலஸ், அரசு அதிகாரிகள் மீனவர்களுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

## நோர்வே உதவி நிறுவனப் பணிப்பாளர் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருகிறார்!

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ்ப்பாணத்தில் நோர்வேயின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களை இனங்கான அந்நாட்டின் உதவி நிறுவனமான 'நொறாட்' அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஈ. ஸ்ராண்ட் அடுத்தமாதம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த நோர்வேத்தூதர் ஹான்ஸ் பிரட்ரீசர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தூதராகப் பதவியேற்றபின் முதல் தடவையாக இங்கு வந்துள்ளேன். இங்குள்ள மக்களின் நிலைமையை அறியவும். மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் இனிமேல் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயவும் இந்த விஜயம் உதவும்.

நோர்வேயின் நிதி உதவி அமைப்பான 'நொறாட்' மூலம் இங்கு மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை இனங்கான அந்த அமைப்பின் பணிப்பாளர் நாயகம் அடுத்த மாதம் இலங்கை வருகின்றார்.

அவர் யாழ்ப்பாணம் வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற் காகவுமே நான் இங்கு வந்தேன் என்றார் அவர். (ம-3)

## வேலணையில் வயோதிபர் மீது கடற்படை தாக்கியதாக முறையீடு

வேலணைப் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு அவரது வீட்டில் வைத்துக் கடற்படையினரால் தாக்கப்பட்டதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. வேலணை கிழக்கு, நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த அ.நாகேஸ் (வயது-80) என்ற வயோதிபரே தாக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது

இச்சம்பவம் பாற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் துப்பாக்கிகள் சகிதம் வீட்டினுள் புகுந்த ஐந்து பேரைக் கண்டதும் குறிப்பிட்ட வயோதிபரும் அவரது மனைவியும் கூக்குரலிட்டுக் கத்தியுள்ளனர். வந்தவர்கள் அவர்களின் வாயைப் பொத்திவிட்டு அவர்களைத் தாக்கியுள்ளனர்.

இதனால், வயோதிபரின் இரண்டு பற்கள் உடைந்துள்ளன. அத்துடன் அவரின் கழுத்துப்பகுதியில் வந்தவர்கள் கத்தியால் கீறியுமுள்ளனர். இதனால், கழுத்துப் பகுதியில் இரு இடங்களில் கீறல் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்திலும், வேலணையில் உள்ள புலிகளின் அரசியற்துறை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வயோதிபரின் வீட்டில் இருந்து 800 ரூபா பணமும் கடற்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

கைதடி இணுக்கித்தோட்ட கந்த சுவாமி ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் அடுத்த மாதம் ஏழாம் திகதி வெள்ளோட்டம் நடைபெறும். ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

## மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் வலி. தென்மேற்குப் பிரதேச சபை ஊழியர்களும், உத்தியோகத்தர்களும் நேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

அண்மைக்காலமாக பொது அமைப்புக்களினதும் வேறு நிறுவனங்களினதும் பிரதிநிதிகளும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (எரி)

## பொலீஸ் நடவடிக்கையால் புத்தளத்தில் குற்றச் செயல் குறைவு

கொழும்பில் இருந்து புத்தளத்துக்கு அனுப்பப்பட்ட விசேட பொலீஸ் குழுவின் அதிரடி நடவடிக்கையால், புத்தளத்தில் இப்போது குற்றச்செயல்கள் குறைந்துள்ளன. அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரின் வேண்டுகோளையடுத்து உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் பணிப்பின்பேரில் பொலீஸ் குழு அனுப்பப்பட்டிருக்கிறது:

கடந்த சில நாள்களாக புத்தளத்தில் இந்த பொலீஸ் குழு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இரவு நேரங்களில் விசேட ரோந்துகளில் ஈடுபடுதல், இரவு நேரங்களில் கூட்டமாகக் கூடி நிற்பவர்களைக் கலைத்தல், குழுக்களாக கலாட்டா செய்யும் மாணவர்களைக் கலைத்தல், சந்தேக நபர்களைச் சோதனையிடுதல், சந்தேகத்திற்குரிய வீடுகளைச் சோதனையிடுதல் போன்ற திடீர் நடவடிக்கைகளில் இந்தப் பொலீஸ் குழு ஈடுபட்டு வருகிறது.

இக்குழு இதுவரை மேற்கொண்ட சோதனைகளின் போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டுத்துப்பாக்கி ஒன்று, கைக்குண்டு ஒன்று, பிஸ்டல் ஒன்று ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட பொலீஸ் குழு எந்நேரமும் ரோந்துச் சேவையில் ஈடுபடுவதால் மக்கள் அச்சமின்றி நடமாடுகின்றனர்.

இதற்காக புத்தளம் மக்கள் அமைச்சர்கள் அஸ்வர், ஜோன் அமரதுங்க ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.



காஸாவில் இடம்பெற்ற பலஸ்தீனர்களின் ஆர்ப்பாட்டத்தில் ஹமாஸ் இயக்கப் போராளி ஒருவர் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்க்கிறார்.

# 10,000 ஹமாஸ் தொண்டர் காஸாவில் கூடி உரத்துக் குரலெழுப்பி ஆகாயத்தில் சூடு!

## பழிக்குப்பழி வாங்கப் போவதாகவும் சூளுரை

காஸா,ஓக.23

காஸாவில், இஸ்ரேலிய ஹெலிகெப்டர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி தமது தலைவர்களின் ஒருவரான அபு ஷானாப்பையும், அவரது இரண்டு மெய்பாதுகலவ்களையும் கொன்றதற்கு பழி வாங்கப் போவதாக ஹமாஸ் இயக்கம் சூளுரைத்துள்ளது.

அபு ஷானாப் கொல்லப்பட்டதைக் கண்டித்து, பல ஆயிரக்கணக்கான ஹமாஸ் ஆதரவாளர்கள் காஸாவின மத்திய பகுதியில் கூடி 'அல்லா ஹு அக்பர்' என்று உச்சரித்தபடி ஆகாயத்தை நோக்கி இயந்திரத் துப்பாக்கிகளால் சூடு நடத்தினர்.

கொல்லப்பட்ட அபு ஷானாப்பின் உடல் நேற்று புதைக்கப்பட்டது. ஆயிரக்காணக்கான பலஸ்தீனியர்கள புடைசூழ அபு ஷானாபின் உடல் தூக்கிச் செல்லப்பட்டு புதைக்கப்பட்டது. பிரேத ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஹமாஸ் உறுப்பினர்கள் கறுப்பு முக மூடியணிந்து ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அபு ஷானாப் கொல்லப்பட்டதை யடுத்து ஹமாஸ் விடுத்துள்ள அறிக்கையில்,

பலஸ்தீனத்தீவிரவாதிகள் யூத அரசின் ஒவ்வொரு மூலை முடக்கிலும் போரிடுவர் என்று தெரிவித்துள்ளது.

ஹமாஸின் இந்த அறிக்கை வெளியான சில நிமிடங்களுக்குள் யூதக் குடியேற்றங்களை நோக்கி காஸாவில் உள்ள பலஸ்தீனர்கள் ஒரு டசினுக்கும் மேற்பட்ட மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர். எனினும், சேதவிவரங்கள் குறித்து எதுவும் தெரியவில்லை.

ஹமாஸ் இயக்கத்தின் சார்பில் பலஸ்தீனப் பிரதமருடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்ட அபு ஷானா கொல்லப்பட்டிருப்பதையடுத்து இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையில் ஓய்ந்திருந்த வன்முறை மீண்டும் வெடித்துள்ளது. இதனால், சமாதானப்பேச்சு அடியோடு குழம்பி விட்டது.

ஹமாஸும், இஸ்லாமிய ஜிஹாத்தும் போர் நிறுத்தத்தை முறித்துக் கொள்வதாக அறிவித்ததையடுத்து, இஸ்ரேலிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அபு ஷானாப் கொல்லப்பட்டது ஹமாஸ் இயக்கத்திற்கு ஒரு பாடமெனத்தெரிவித்துள்ள இஸ்ரேல், இந்தக்கொலை ஹமாஸுக்கு போதுமனதல்ல என்றும் கூறியுள்ளது.

அத்துடன், காஸாப் பிரதான நெடுஞ்சாலையில் வீதித் தடையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் சமாதான முயற்சிகள் முறியடிக்கப்பட்டுளளன என்று பலஸ்தீனத் தரப்பு தெரிவிக்கிறது.

# அமெரிக்கத் தாக்குதலில் இருந்து மீண்டும் தப்பினார் சதாம் ஹுசைன்!

புதுடில்லி,ஓக.23

பேரழிவு ஆயுதங்களைத் தயாரித்ததாகப புகார் கூறி ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி சதாம் ஆட்சியை வீழ்த்தியது.

ஈராக்கில் தங்கியிருக்கும் அமெரிக்கப் படை சதாம் ஹுசைன் மற்றும் அவரது ஆதரவாளர்களை வலை போட்டுத் தேடிவருகிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு சதாம் தனது சொந்த ஊரான திக்ரித் நகரில் ஒரு வீட்டில் பதுங்கி இருந்தபோது அமெரிக்கப் படை சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தியது. இதிலும் சதாம் தப்பிவிட்டார்.

இந்நிலையில் சதாம் பக்தாத் நகருக்கு தென்மேற்கே உள்ள பாக்குவா என்ற இடத்தில் ஒரு வீட்டில் பதுங்கியிருப்பதாக அமெரிக்கப் படையினருக்கு தகவல் கிடைத்தது. புலனாய்வுத்துறையினர் கொடுத்த இந்த தகவலின் பேரில் அந்த வீட்டை அமெரிக்கப் படையினர் சுற்றிவளைத்தனர்.

அந்த வீட்டைச் சுற்றிவளைத்த அமெரிக்கப் படையினர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர். இதில் அந்த வீட்டின் பகுதிகள் இடிந்து தரை மட்டமாகின. எந்திரத் துப்பாக்கியால் சுட்டபடியே அமெரிக்க வீரர்கள் அந்த வீட்டுக்குள் புகுந்தனர்.



ஆனால், அந்தவீட்டில் சதாம் இல்லை. அவரது உறவினர் சிலர் மட்டுமே இருந்தனர். அமெரிக்க படையின் வருவதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு சதாம் தப்பிவிட்டார்.

இதுபற்றி ஈராக்கில் உள்ள அமெரிக்க படையின் 4ஆவது படைப் பிரிவுத் தளபதி ரேமாண்ட் ஆடிர்னோ கூறும்போது, சதாம் இன்னும் அந்தப் பகுதியில் எங்கேயோ பதுங்கி இருக்கிறார். எப்படியும் அவரை விரைவில் பிடித்துவிடுவோம் என்று தெரிவித்தார். சதாம் பதுங்கிய இடம் பக்தாத் நகரில் இருந்து 65 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. அங்கு அவரை ஆதரிப்பவர்கள் ஏராளம் பேர் இருக்கின்றார்கள்.

இதேவேளை, ஈராக் தலைநகர் பக்தாத்தின் தென்புறமாக அமைந்துள்ள ஹில்லா நகரில் நேற்று நடந்த சூட்டுச் சம்பவத்தில் அமெரிக்கப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவருடன் சேர்த்து ஈராக் போர் முடிந்த பின்னர் இதுவரை 65 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)



6ஆவது உலகத் தமிழ் இணைய மாநாடு நேற்று சென்னை அண்ணா பல்கலைக்கழகக் கலையரங்கில் ஆரம்பமானது. இந்த மாநாட்டை தமிழக முதல்வர் ஜெயலலிதா குத்துவிளக்கேற்றித் தொடக்கி வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

### இந்திய நாடாளுமன்றத்தில்

# பசுவதை தடை மசோதா தாக்கல் கைவிடப்பட்டது

புதுடில்லி,ஓக.23

தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., தெலுங்கு தேசம் உட்பட் பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகளே கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால், இந்திய நாடாளுமன்றத்தில் தடுப்பு மசோதா தாக்கல் செய்வது நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த மசோதாவுக்கு இடது சாரிக் கட்சிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், காங்கிரஸ் கட்சி எதிர்க்கவில்லை. இந்த மசோதா நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருந்தது.

ஆனால், இந்த மசோதா, சிறுபான்மையினருக்கு எதிரானது, ஒரு பிரிவினரின் உரிமைகளை மறுப்பது, இதை அறிமுகப்படுத்த விடமாட்டோம் என்று ஆளும் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கோஷமிட்டனர்.

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் மசோதாவைக் கடுமையாக எதிர்த்தனர். ஆனால், பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் மட்டும் மௌனம் சாதித்தது.

எதிர்க்கட்சியினரை விட, கூட்டணிக் கட்சியினரின் எதிர்ப்புக் கடுமையாக இருந்தது. இறுதியில் பசுவதை தடுப்பு மசோதா தாக்கல் செய்யப் படுவது ஒத்திவைக்கப்பட்டது.

### இந்தியாவில் விற்பனையாகும்

# குளிர்பானங்களில் நச்சுத்தன்மை; நாடாளுமன்றக் குழு ஆராயும்

இந்தியாவில் பெப்ஸி, கோகோ கோலா உட்பட 12 வகை குளிர்பானங்களில் கூடுதல் நச்சுத் தன்மை இருந்ததாக டில்லியில் உள்ள அறிவியல், சுற்றுச்சூழல் ஆய்வு நிறுவனம் சோதனை நடத்தி முடிவை வெளியிட்டது.

இதைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் பெப்சி, கோகோ குளிர்பானங்களுக்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

இந்தநிலையில் மைசூர் மற்றும் கொல்கத்தாவில் உள்ள ஆய்வுகூடங்களில் இந்த குளிர்பானங்களில் நச்சுத்தன்மை பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு அறிக்கையின் முடிவு பறறி மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறும்போது அநத் குளிர்பானங்களில் நச்சுத்தன்மை அதிகம் இல்லை என்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததோடு இது பற்றி நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது.

இதைத் தொடர்ந்து 15 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுக்குழு அடுத்த நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கியதும் தனது அறிக்கையை தாக்கல் செய்யும் என்று சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

# போருக்கு படையினரை அனுப்பியதில் ஆஸ்திரேலிய அரசியலிலும் சர்ச்சை

ஈராக்குடன் போரைத் தொடங்குவதற்காக ஆஸ்திரேலிய அரசு புலனாய்வுத் தகவல்களை மிகைப்படுத்தித் தெரிவித்ததாக ஆஸ்திரேலிய புலனாய்வு ஆய்வாளர் அன்ட்றூ வில்க்கி தெரிவித்துள்ளார்.

2,000 ஆஸ்திரேலிய படையினரை ஈராக்கிற்கு அனுப்புவதை நியாயப் படுத்திக் காட்டுவதற்காக பிரதமர் ஜோன் ஹோவாட் கூறிய புலனாய்வுத் தகவல் தொடர்பான நாடாளுமன்ற விசாரணையின் முதல் நாளான நேற்று மேற்படி விவகாரம் கிளப்பப்பட்டுள்ளது.

பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் கிளம்பியதைப்போலவே ஆஸ்திரேலியாவிலும் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பாக, புலனாய்வுத் தகவல்கள் பற்றிய சர்ச்சைகள் எழுந்துள்ளன.

ஈராக் மீதான போருக்கு தனது எதிர்ப்பைக் காட்டி பதவியை இராஜினாமாச் செய்த புலனாய்வாளர் அன்ட்றூ வில்க்கி, அரசியல் நோக்கங்களுக்காக புலனாய்வுத் தகவல்கள் திரிக்கப்பட்டிருந்தன எனத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய தேசிய மதிப்பீட்டு அலுவலகத்திலிருந்து பிரதமரின் அலுவலகத்திற்கு புலனாய்வுத் தகவல்கள் அனுப்பப்படும் வழியிலேயே மிகைப்படுத்தலகளும், நேர்மையீனங்களும் நிகழ்த்தப்பட்டன என்று அவர் கூறியுள்ளார்.

ஈராக் போருக்கு படையினரை அனுப்பியது குறித்து சர்ச்சை கிளம்பியுள்ளதையடுத்து இது குறித்து விசாரிக்கவென ஆஸ்திரேலிய செனட் சபையினால் விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி விசாரணை முடிவுகள் அறிவிக்கப் படும். விசாரணைகள் இரகசியமாக நடத்தப்படவேண்டும் என்று விசாரணைக்குழுவின் தலைவர் டேவிட் ஜூல் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

(ஒ)

## இந்தியாவின் கடன் சுமை

புதுடில்லி,ஓக.23

உலக நாடுகளுக்கு இந்தியா திருப்பிச் செலுத்தவேண்டிய மொத்தக் கடன்தொகை இந்தியப் பணத்தில் ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 65 கோடி ரூபா என்று இந்திய நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங் தெரிவித்தார்.

இதில் உலக வங்கிக்கு மட்டும் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 705 கோடி இந்திய ரூபா செலுத்தவேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

# நியூஸிலாந்திலும், ஈரானிலும் சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள்

நியூஸிலாந்தின் தென்பகுதியிலும், ஈரானின் தென்பகுதியிலும் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்று அதிகாலை நியூஸிலாந்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் 7.1 ரிசடர் அளவாகப் பதிவாகி இருந்தது. சுமார் இரண்டு நிமிடங்கள் உணரப்பட்ட இந்த நிலநடுக்கத்தினால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பன்னிரு தடவைகள் நில அதிர்வு உணரப்பட்டது. இதனால் அங்கு சுற்றுலாவுக்கு வந்த பயணிகள் ஹோட்டல்களில் இருந்து வெட்டவெளி நோக்கி தலைதெறிக்க ஓட்டம் எடுத்தனர். போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தினால் வீடுகளும், ஹோட்டல்களும் சேதமடைந்தன என்று நியூஸிலாந்து அரசு அறிவித்துள்ளது.

அதேபோல் ஈரானின் தென்பகுதியில் 5.7 ரிசடர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதி பாலைவனப் பிரதேசம் என்பதால் சேதங்கள் ஏற்படவில்லை.

கடந்த ஆண்டு ஈரானில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தினால் 229பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரபஞ்ச பேரழகி போட்டி 2004 இல் ஈக்குவடோரில்

2004 ஆம் ஆண்டுக்கான 'மிஸ் யூனிவேர்ஸ்' (பிரபஞ்ச பேரழகி) போட்டியை தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டது.

இந்தப்போட்டியை நடத்துவதற்காக அந்த நாடு ஐம்பது கோடி ரூபாவை போட்டி ஏற்பாட்டாளருக்கு வழங்கவுள்ளது. ஆனால், இந்தப் போட்டி மூலம் சுற்றுலாத்துறை வருமானமாக சுமார் ஆயிரம் கோடி ரூபா ஈக்குவடோர் நாட்டிற்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருடம் பிரபஞ்ச பேரழகிப் போட்டி பனாமா நாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்த அடிப்படையிலான

## மீள் நியமன விண்ணப்பம் கோரல்

**சுகாதார சேவைகள், மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பிரிவு, யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனத்தில் 2004ஆம் ஆண்டு காலத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளீற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வைத்திய உத்தியோகத்தர்.
2. பதிவு வைத்திய உத்தியோகத்தர்/ உதவி வைத்திய உத்தியோகத்தர்.
3. மருந்தாளர்.
4. ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்.
5. தாதிய உத்தியோகத்தர்.
6. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்.
7. ஊடகக் கதிர் படப்பிடிப்பாளர்.
8. பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்.
9. மருத்துக் கலவையாளர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் ஆவணங்களுடன் 2003.08.30ஆம் திகதிக்கு முன்னர் *சுகாதார சேவைகள், மாகாணப் பிரதிப் பணிப்பாளர், சு.சே.மா.பி.ப.பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு பின்வரும் ஆவணங்களின் 3 பிரதிகளுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. ஓய்வூதிய கொடைப் பத்திரம்
2. இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பளப்படி நிலையில் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம்.
3. சமாதான நீதிவானின் நற்சான்றிதழ்.
4. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம்.
5. தற்போதைய உடல், உள நிலை பற்றிய மருத்துவ உத்தியோகத்தரின் சான்றிதழ்.
6. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
7. 60 வயதுக்கு உட்பட்டவரெனில் தனது ஓய்வூதியத்தை உறை நிலையில் வைப்பதற்கான சம்மதக்கடிதம்.

**வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்,**
**மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

(c/29713)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அலுவலகத்தில் கடமை புரியும் அஞ்சலர்

**திரு.நா.நவரட்ணம்**

அவர்கள் 18.08.2003 திங்கட்கிழமை யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*அஞ்சல் அதிபர்,*
*உப - அஞ்சல் அதிபர்கள்,*
*மற்றும் சக ஊழியர்களும்.*

அஞ்சல் அலுவலகம்,
தெல்லிப்பழை.

(21746) (25-21-14-16)

## கண்ணீரஞ்சலி

எமது பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியப் பணியாற்றிய

**திருமதி பாக்கியலக்சுமி பேரம்பலம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பா.அ.ச., ப.மா.ச.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

C/29709

## கண்ணீரஞ்சலி

யாழ். பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர்

**திரு.பா.செந்தில்நந்தனன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னையா பாலசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

(21747) (21-14-16)

# கேள்விப் பத்திரங்கள் கோரல்

TURN KEY அடிப்படையில் 20 மெற்றிக்தொன் அளவு கொண்ட உறைநீர் (ஐஸ்) பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திரங்களைப் பொருத்துவதற்கான கட்டடத்தை வடிவமைத்து நிர்மாணித்தலும், இயந்திரங்களைப் பொருத்திக் குறிப்பிட்ட காலத்திற்கு இயக்கி கையளித்தலும் (வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் இயக்குதலும் பராமரித்தலும்).

**ஒப்பந்தங்களின் பெயர்களும், குறியீட்டு இலக்கங்களும்:**

i. யாழ்ப்பாண மாவட்டம் - மருதங்கேணியில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறைநீர் பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க உறைநீர் உற்பத்தி இயந்திர சாதனத்தைப் பேணுவதற்கான கட்டடத்தை வடிவமைத்தலும், நிர்மாணித்தல், இயந்திர சாதனத் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் இயக்குதலும், பராமரித்தலும்.
ஒப்பந்த இலக்கம்: NEP / MRR / B / J01

ii. முல்லைத்தீவு மாவட்டம் - முல்லைத்தீவில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறைநீர் பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திர சாதனத்தைப் பேணுவதற்கான கட்டடத்தை வடிவமைத்தல், நிர்மாணித்தல், இயந்திர சாதனத் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் இயக்குதலும் பராமரித்தலும்.
ஒப்பந்த இலக்கம்: NEP / MRR / B / M01

iii. அம்பாறை மாவட்டம் - திருக்கோவிலில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறைநீர்ப் பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திர சாதனத்தைப் பேணுவதற்காக கட்டடத்தை வடிவமைத்தல், நிர்மாணித்தல், இயந்திரசாதனத் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் இயக்குதலும், பராமரித்தலும்.
ஒப்பந்த இலக்கம்: NEP / MRR / B / A01

vi. அம்பாறை மாவட்டம் - சாய்ந்தமருதுவில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறை நீர்ப்பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திர சாதனத் தொகுதியை பொருத்துதல் மற்றும் இயக்குதலும், பராமரித்தலும்.
ஒப்பந்த இலக்கம்: NEP / MRR / B / A02

01. ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை (GATB) வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சார்பில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேலையை நிறைவேற்ற, தகுதியான கேள்வியாளர்களிடமிருந்து மூடி அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்களைக் கோருகிறது.

- கேள்வியாளரொருவர் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளையோ சமர்ப்பிக்கலாம். இருந்தபோதும், கேள்வி ஆவணங்களில் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பிரமாணப்படி குறிப்பிட்ட தனியொரு கேள்விதாரருக்கு இரு ஒப்பந்தங்கள் மட்டுமே வழங்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் கேள்வியாளரொருவர் அதற்காக ஒவ்வொரு வேலைத்திட்டங்களுக்கான தனித்தனியான கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யவேண்டும்.

02. கேள்விகள் *மாகாணப் பணிப்பாளர் காரியாலயம், கட்டடங்கள் திணைக்களம், உட்துறை முகவீதி, திருகோணமலை* அவர்களிடம் இருந்து கேள்வி ஆவணங்களை 2003 ஓகஸ்ட் 23ஆம் திகதிமுதல் 2003 செப்ரெம்பர் 09ஆம் திகதி பிற்பகல் 03மணிவரை கேள்வியொன்றுக்கு மீளளிக்கப்படாத (ரூபா 5000/-) ஐயாயிரத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. கேள்விதாரர்கள் கீழ்க்காணும் தகுதிப் பிரமாணங்களைக் கொண்டிருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அ. கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிப் பிரமாணங்களைக் கொண்டிருப்பதுடன், ஒப்பந்தகாரர்கள் ICTADயில் M4 அல்லது EM2 ஆகிய பிரிவுகளின்கீழ் அல்லது அதற்குமேல் பதிவுசெய்யப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

ஆ. கேள்வியாளரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைத்திட்டங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்குமிடத்து ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கேள்வி ஆவணத்தில் கேட்டுக் கொண்டபடி ஒப்பந்தம் இணைக்கப்படல் வேண்டும்.

இ. மேற்கூறப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் தகுதிகாண் கேள்விதாரரொருவர், கேள்வித் தொகையின் இருமடங்கு பெறுமதியான ரொக்கம் உள்ளதாக நிருபிப்பதுடன் / அல்லது கேள்வியின் பிரிவு 4:3 (7) இற்கமைய கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி கொண்டிருப்பதாக நிருபிப்பின், அவருக்கு இரு ஒப்பந்தங்களை வழங்குவது குறித்துப் பரிசீலிக்கலாம்.

04. தகுதிகாண் கேள்விதாரர் ஒருவர் இக்கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களையும், கேள்விப்பத்திர ஆவணங்களையும் *பணிப்பாளர் காரியாலயம், கட்டடத் திணைக்களம், வ/கி மாகாண சபை, திருகோணமலை* என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

05. திருகோணமலை, வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கட்டடத் திணைக்களத்தில் கட்டணம் செலுத்தாது இக்கேள்விப்பத்திர விவரங்களைப் பார்வையிடமுடியும்.

06. இக்கேள்விகள் 2003-12-29ஆம் திகதிவரை செல்லுபடியாகும்.

07. ஒவ்வொரு கேள்வியுடனும் கேள்விப் பிணைப்பணமாக (ரூபா 200,000/-) இரண்டு லட்சம் ரூபா செலுத்தப்படல் வேண்டும்.

08. அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பிரதம செயலாளர், வ/கி மாகாண பிரதம செயலாளா காரியாலயம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற விலாசத்தில் சேர்பிக்கப்படலாம்.

09. வடிவமைப்பு, நிர்மாணம், பொருத்துதல் பணி மற்றும் ஒப்படைப்பு என்பவற்றுக்கு (09) ஒன்பது மாதமும் இதன் பின்னர் இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு (03) மூன்று வருட கால அவகாசமும் வழங்கப்படும்.

10. 2003-09-29ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் கேள்விகள் ஏற்பது நிறுத்தப்பட்டு தொடர்ந்து உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும்.

11. கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் சமுகந்தருமாறு கோரப்படுகின்றனர்.

**தலைவர்,**
**ஆளுநர் நியமன கேள்விச் சபை,**
**பிரதம செயலாளர் காரியாலயம்,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**

(சி-29715) (24-14-16)

## உதயன்

# குழப்பும் சக்திகளின் கைகள் ஓங்குகின்றனவா?

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் முயற்சிகள் கடந்த ஒன்றரை வருடகாலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்கு நியாயமான உரிமை வழங்கி, அதன்மூலம் இனப்பூசலுக்கு இணக்கத்தீர்வு காணவே இந்த முயற்சிகள்.

ஆனால், தமிழ்பேசும் மக்களுக்கு அவர்களுக்குரிய நியாயமான உரிமைகள் வழங்கப்படுவதை கிஞ்சித்தும் விரும்பாத சக்திகள், எப்படியேனும் இந்த அமைதி முயற்சிகளைக் குழப்பவேண்டும் என்பதற்காக கங்கணம் கட்டிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதற்காக அத்தகைய சக்திகள் நாடும் வழி வகைகளுள் ஒன்றுதான் தமிழ்பேசும் மக்களிடையே குழப்ப நிலையை ஏற்படுத்தி, அதன்மூலம் சமாதான முயற்சிகளையே அடியோடு நிர்மூலமாக்குவதாகும்.

தமிழ்பேசும் மக்களாகிய தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒருவருக்கெதிராக மற்றவரை மோதவிட்டு தமது எண்ணத்தை நிறைவேற்றுவது இந்தச் சக்திகளின் சதித்திட்டம்.

இந்த முயற்சியில் அவை கணிசமான வெற்றிகளைக் கண்டிருக்கின்றன என்றே கூறவேண்டும்.

இந்தச் சக்திகளின் முயற்சிகளுக்கு அரசியல்வாதிகள் கருவிகளாவதும் -

அவற்றின் தூண்டுதல்களுக்கு பொதுமக்கள் இலகுவாக எடுபடுவதும் -

மிகவும் கவலைக்குரியதும் நிலைமையை மோசமாக்குவதுமாகும்.

தங்களைச் சமூகத்தில் இனங்காட்டாமல், மறைவில் தாம் புரியும் வன்முறைச் சம்பவங்கள் மூலம், தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கி நிலைமையை மோசமடைய வைத்திருக்கின்றன இச்சக்திகள். இதன்மூலம் தமது நோக்கத்தை அவை எட்டியிருக்கின்றன என்றே கூறவேண்டும்.

"செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலைமீது!" என்பதுபோல அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நடக்கும் இத்தகைய வன்முறைச் சம்பவங்களுக்கான பொறுப்பை மிகச் சுலபமாக விடுதலைப் புலிகள் அமைப்பு மீது சுமத்திவிட்டு, அதன்மூலம் தமிழ் - முஸ்லிம் இனப் பதற்றத்தை இலகுவாக வளர்த்து விடுகின்றன இச்சக்திகள்.

அதுமட்டுமல்ல, அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறும் இத்தகைய சம்பவங்களின் சூத்திரதாரிகளை புலிகளே கண்டுபிடித்து, அம்பலப்படுத்த வேண்டும் எனவும், இல்லையேல் இச்சம்பவங்களுக்குப் புலிகள் மீது சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாதது எனவும் சாரப்படக் கருத்து வெளியிடுவதன் மூலம் சில அரசியல்வாதிகளும் இத்தகைய வன்செயல் சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் முடிச்சுப் போட்டு நிலைமையை மேலும் மோசமாக்குகின்றார்கள்.

எது எப்படியோ தொடர்ந்து இடம்பெறும் வன்செயல் சம்பவங்கள் மூலம் தமிழர் - முஸ்லிம் முரண்பாட்டை முனைப்படையச் செய்து, குழப்பநிலையை உருவாக்குவதில் ஆர்வமுள்ள இச்சக்திகள், தங்கள் இலக்கை நோக்கி மெல்ல மெல்ல நகருகின்றன என்பது களநிலைவர உண்மையாகும்.

வடக்கு - கிழக்கு பிரிப்புப் பற்றிய பரபரப்பு அறிவிப்புகள் -

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் முயற்சிகள் சற்றும் முன்னேறுவதற்கு இடையில் அதைக் குழப்பும் விதத்தில் அவசர அவசரமாக பொலீஸ் சேவைக்கு தமிழ்பேசும் ஆள்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் -

இவைபோன்ற குழப்பங்கள் இதனைத்தான் தெளிவுபடுத்துகின்றன.

இத்தகைய குழப்ப சக்திகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் முளையிலேயே கிள்ளியெறியாவிட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளை அடியோடு குழப்பி அடிக்கும் வரை அவை ஓயமாட்டா என்பது நிச்சயம்.

திரைமறைவில் சூத்திரதாரிகள் யார் எனத் தெரியாமல் நடத்தப்படும் வன்முறைச் சம்பவங்களால் மக்களும், அரசியல்வாதிகளும் கொதித்துப் போய் அவசரப்பட்டு - பதற்றப்பட்டு - கலவரப்பட்டு - மோசமான நிலைவரத்தை ஏற்படுத்துவது இத்தகைய திரைமறைவு சக்திகளை மேலும் மேலும் அந்த வழியில் செயற்பட தூண்டுவதாகவும் உற்சாகமளிப்பதாகவும் இருக்கும்.

தமிழ்பேசும் மக்களைப் பிரித்தாளும் தந்திரத்தின் ஒரு கட்டமே இத்தகைய முயற்சி என்பதை மக்களும் அரசியல்வாதிகளும் உணர்ந்துகொண்டால் இந்த சதிமுயற்சியை இலகுவாக முறியடிக்க முடியும்.

# தரம் I போட்டிப் பரீட்சையில் 32 கிராம அலுவலர்கள் சித்தி

வலி.வடக்கு,ஓக.23

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 32 கிராம அலுவலர்கள் தரம் I கிராம அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

ஏற்கனவே சேவைமூப்பு அடிப்படையில் இவ்வாண்டு 86 கிராம அலுவலர்கள் தரம் I இற்குப் பதவி உயர்த்தப்பட்டிருந்தனர். இந்நிலையில், பின்வருவோர் தரம் I இற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு - வை.குருமூர்த்தி.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு - க.கனகசபாபதி, தி.ஸ்ரீஸ்கந்தராசா.

வேலணை பிரதேச செயலர் பிரிவு - கு.அம்பிகைபாகன், சி.ரவீந்திரதாஸ்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு - செ.சச்சிதானந்தன், கு.சாந்தமோகன்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு - பூ.சிவபாதசுந்தரம், அ.தனபாலரத்தினம், இ.துரைராசா, தி.நித்தியானந்தன், இ.இராஜயோகன்.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவு - நா.குமரகுருநாதன், க.சிறீகரன், க.விஜயவேள்.

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவு - செ.வைத்தியநாதன், சி.சாந்தநாயகம், சி.சக்திகிரிவன்.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு - த.கணேசதாஸ்.

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு - க.சண்முகவடிவேல்.

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு - க.நடராஜமூர்த்தி, ந.இராஜகுமாரன், பொ.லோகேந்திரன்.

வடமராட்சி தெற்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு - சி.குணராசா, த.சுந்தரபாரதி, க.ஆனந்தராசா, சி.பிரபாகரன், க.புவனேந்திரன்.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு - சி.யோகநாதன், ச.நாகதீபசோதிரூபன்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு - த.தர்மகுலசிங்கம், வி.நடராசா.

மேற்படி கிராம அலுவலர்களுடைய தனிநபர் சேவைகளை அனுப்பிவைக்கும்படி உள்நாட்டலுவல்கள் அமைச்சு பிரதேச, உதவி அரசாங்க அதிபர்களைக் கோரியுள்ளது. (ஒ-86)

## அபிவிருத்திச் சங்கங்களை மீள இயக்க நடவடிக்கை

வலி.வடக்கு,ஓக.23

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்படாத நிலையில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை மீள இயங்கச் செய்வதற்கு வேண்டிய முன் முயற்சி நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

இச்சங்கங்கள் மீள இயங்குவதில் உள்ள தடைகள் சம்பந்தமாக நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் அவர் கலந்துரையாடியுள்ளார்.

இதேநேரம், கிராம அலுவலர் பிரிவு ரீதியாகச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லூர், யாழ்ப்பாணக் கோட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் பூமகள், இச்சங்கங்களைப் புனரமைப்பதற்கும் புதிய சங்கங்களை அமைப்பதற்கு மான கருத்தரங்குகளை நடத்தி வருகிறார்.

(ஒ-86)

## 'கெயர்' நிறுவனத்தின் உதவியுடன் 36 விவசாயக் கிணறு புனரமைப்பு

### திட்ட இணைப்பாளர் தகவல்

சண்டிலிப்பாய்,ஓக.23

கெயர் நிறுவனத்தின் 'நாளைய சுபீட்சத்திற்கான முன்னெடுப்பு' திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 36 விவசாயக் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதன் பிரகாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 13 விவசாயக் கிணறுகளும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 6 விவசாயக் கிணறுகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 14 விவசாயக் கிணறுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மூன்று விவசாயக் கிணறுகளும் புனரமைப்புச் செய்யப்படும்.

அதேவேளை - இத்திட்டத்தின் கீழ் சங்கானை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கோணாவில் குளமும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அம்மன் கோவில் குளமும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

புனரமைப்புச் செய்யப்படவுள்ள விவசாய கிணறுகளின் பயனாளிகளுக்கான கலந்துரையாடல் இவ்வாரம் நல்லூரிலுள்ள யாழ். கமநல சேவைகள் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது குறித்த அறிவுரைகளும் ஆலோசனைகளும் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு இக்கூட்டத்தில் வழங்கப்பட்டது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

## தொடர்ந்து பெய்துவரும் மழையால் வெங்காயச் செய்கை பெரும் பாதிப்பு

சண்டிலிப்பாய்,ஓக.23

கடந்த சில தினங்களாக வலி.தென்மேற்குப் பகுதியில் பெய்த பலத்த மழையினால் வெங்காயச் செய்கை பெரும் பாதிப்படைந் துள்ளது.

பண்டத்தரிப்பு, மாதகல், வடலியடைப்பு, சில்லாலை ஆகிய இடங்களில் வைகாசிப் போக வெங்காயச் செய்கையின் அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

இந்தவேளையில், கடும்மழை பெய்ததால் கிண்டி, பிடியாகக் கட்டுவதற்கென வைக்கப்பட்டிருந்த பெருமளவு வெங்காயம ஈரத் தன்மையடைந்துள்ளது.

இதேவேளை, தாழ்வான காணிகளில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயமும் இரண்டு நாள்களுக்கு மேல் வெள்ளம் நின்றதால் அழுகி பழுதடைந்துள்ளது.

இதனால் விவசாயிகளுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வலி.தென்மேற்கு விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

### நாளை

ஆவணி 7
ஞாயிற்றுக்கிழமை
(24.08.2003)
திதி : துவாதசி
பின்னிரவு 12.36 வரை
நட்சத்திரம்: புநர்பூசம்
வைகறை 5.10 வரை
சுபநேரம் : 9.05 - 10.35
ராகுகாலம்: 4.35-6.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அதிகாரத்தில் நாட்டம் கொண்டவரிடம் ஆனந்தம் தங்குவதில்லை.

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவில் நாளுக்கொரு நடைமுறைகள்

### கிராமிய புனர்வாழ்வுக் குழுவினர் சலிப்பு

வலி.வடக்கு,ஓக.23

மீளக்குடியமர்ந்தோருக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சம்பந்தமாக நாளுக்கு நாள் புதிய நடைமுறைகள் அறிமுகம் செய்யப்படுவதாக கிராமிய புனர்வாழ்வுக் குழுவினர் சலிப்புத் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே, கிராமிய புனரமைப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு பின்னர் அதில் சிலர் நீக்கப்பட்டு புதியவர்கள் சேர்க்கப்பட்டனர்.

இக்குழுவினர்களுக்கு இன்றுவரை எந்தவோர் உயர் அதிகாரியும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு சம்பந்தமாக நேரில் விளக்கமளிக்கவில்லை. அத்துடன், அவர்களுக்கு விளக்க எந்த வகையான கைநூல்களையோ அன்றி அறிவுறுத்தல்களையோ கூட வழங்கவில்லை. இதனால் கிராம அலுவலர்கள் கூறும் விவரங்களின் அடிப்படையில் அவர்கள் செயற்படுகின்றனர்.

இந்நிலையில். யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான பயனாளிகளின் பெயர்கள் தெரிவுசெய்யப்பட்டன. அப்பெயர்ப் பட்டியல் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு பயனாளிகளின் கையொப்பம் பெறும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. அந்தச் சமயத்தில் இது தொடர்பாக புதிய அறிவுறுத்தல்கள் வழங்குவதினால் பொதுமகள் சிரமம் அடைவதுடன் புனர்வாழ்வுக் குழுவினரும் சலிப்படைவதாகக் கூறப்படுகிறது.

பயனாளிகளிடம் கையொப்பம் பெறும்போது கூறும் அறிவுறுத்தல்களை முன்னதாகவே தமக்கு தெரிவித்து இருந்தால் பொதுமக்கள் சிரமப்பட நேரிடாது என்று புனர்வாழ்வுக்குழுவினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(ஒ-86)

### கீரிமலை கமநல சேவை நிலையத்தில்

## 'சீடா' திட்டத்தின்கீழ் நீரிறைக்கும் இயந்திரம்

### கடனடிப்படையில் விவசாயிகள் பெறலாம்

சண்டிலிப்பாய்,ஓக.23

மாகியப்பிட்டியில் இயங்கிவரும் கீரிமலை கமநல சேவை கேந்திர நிலையத்தில் "சீடா" திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கடனடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைப் பெறவிரும்பும் விவசாயிகள் தமது பிரிவு விவசாயிகள் சம்மேளனத்தின் உறுப்பினராக இருத்தல்வேண்டும் என்றும் -

இரு விவசாயிகளின் பிணை உறுதி கையொப்பத்துடன் இதனைப் பெறமுடியும் என்றும் - கீரிமலை கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சாவித்திரிதேவி குகனேசன் தெரிவித்தார்.

முதலாவது கட்ட தவணைப் பணத்தைச் செலுத்தி நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பெற்ற பின்னர் மூன்று தவணைகளில் மிகுதிக் கட்டுப்பணத்தைச் செலுத்தமுடியும் - என்றும் அவர் கூறினார்.

'றொபின்' மற்றும் "வில்லியஸ்' ரக நீர் இறைக்கும் இயந்திரங்கள் இவ்வாறு வழங்கப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இன்று மண்டலாபிஷேக பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஓக.23

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கௌரி உடனுறை திருக்கேதீச்சரநாதர் ஆலய மண்டல நன்னீராட்டு நிறைவுப் பெருவிழா (மணடலாபிஷேக நிறைவு விழா) இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 27 ஆண்டுகள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இன்றியும் பதின்மூன்று ஆண்டுகள் நித்திய, நைமித்திய பூசைகள் இன்றியும் இருந்த இந்த ஆலயத்தில் கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவும், அதனைத் தொடர்ந்து நாற்பத்தியேழு நாள்கள் மண்டல நீராட்டு விழாவும் நடைபெற்று வந்தது.

இன்று நடைபெறுகின்ற மண்டலாபிஷேக நிறைவுவிழாவில் இந்தியாவின் தமிழ்நாடு திருஆவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்கவுள்ளார்.

1008 சங்குகள் கொண்டு நடைபெறவுள்ள இந்த நன்னீராட்டு நிறைவுப் பெருவிழாவில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த அடியார்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கொம்மாந்தறை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சின்னத்துரை குணலிங்கம் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவாயில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (21673)

வேலுப்பிள்ளை ரதீஷன் என்பவருடைய வேலை அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை (09030115887), சாரதி அனுமதிப்பத்திரம் (A006450652) என்பன சங்கானைக்கும் சுழிபுரத்திற்கும் இடையில 09-08-2003இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சங்கானை எனும் முகவரியில் ஒப்படைககவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (21719)

T.கிருஸ்ணாகரன் என்பவரது நிரந்தர வைப்பிலிடப்பட்ட சான்றிதழ் மூன்று யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய்க்கு செல்லும் வழியில் 10.08.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் K.கண்ணபிரான், இளந்தாரி கோயிலடி, இணுவில் கிழக்கு, இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (21736)

## விற்பனைக்கு

பந்தல், கதிரை மற்றும் சோடனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. பாலசிங்கம், ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. T.P.077 6039887 (21718)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள், அச்சுக்கூடத் தளபாடங்கள், அச்சுக்கூட பேப்பர் றாக்கை பெரியது, கண்ணாடி சோக்கேஸ் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.மகேஸ், 340, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.077 6131649. (21731)

Bajaj Boxer மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.சஞ்சயன், 330 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். மாலை 5.00 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும்.(21741)

## காணி விற்பனைக்கு

மல்லாகம், சோடாக்கம்பனி ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய பனைகளுடன் கூடிய விசாலமான காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.செந்தில்குமாரன், சேனாதிமில் கோணற்புல ஒழுங்கை, மல்லாகம். (21701)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர் 1Kg 160/- மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1, மான்ஸ் பாடசாலை வீதி, டச்சுறோட், உடுவில் 2. பொன்னாலை வீதி, விதானையார் வளவு, மானிப்பாய். (21611)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள (விலை 45/-), தடுப்பூசி போடப்பட்ட சிவப்பு சேவல் குஞ்சுகள் (விலை 15/-) 25-08-2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21417)

தரமான Prima Brolier குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 25.08.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21614)

## போட்டிப்பரீட்சை(SSO)

அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான போட்டிப் பரீட்சைக்குரிய பொது அறிவும் நுண்ணறிவும் என்னும் நூல வெளிவந்துள்ளது. யாழ்.பிரபல புத்தக சாலைகளிலும் கொழும்பிலும் பெற்றுக கொள்ளலாம். விலை ரூபா 120. பிரபல ஆசிரியர் கே.கமலதாசன். (21704)

## மணமகள்கள் தேவை

1971ஆம் ஆண்டு, பாவம் குறைந்த, செவ்வாய்க் குற்றமற்ற, சொந்தமான, பெறுமதியான வர்த்தருக்கும், 1961ஆம ஆண்டு, செவ்வாய்க்குற்றமற்ற எலெக்றிக்கல் இஞ்சினியருக்கும், 1974ஆம் ஆண்டு, 43பாவமுடைய, CIMA முடித்து, எக்கவுண்டனாக பணிபுரியும் சைவ மணமகனுக்கும் தகுதியான மணமகள்கள் தேவை. தொடர்பு: 298, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்துக்கு அருகில்). (21696)

1973ஆம் ஆண்டு, பாவம் குறைந்த விரிவுரையாளருக்கும், 1975 ஆம் ஆண்டு பாவம் 371/4 செவ்வாய்க குற்றமற்ற டாக்டருக்கும், 1968ஆம் ஆண்டு B.Sc. ஆசிரியருக்கும் (பாவம் குறைந்த), 1958ஆம் ஆண்டு, செவ்வாய்க்குற்றம் 60 பாவமுடைய M.Sc. Computer U.K. மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. தொடர்பு: 298, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்துக்கு அருகில்). (21697)

## திருமண சேவை

1970, ரேவதி, செவ்வாயற்ற கௌரவ குடும்ப, படித்த மணப்பெணணுக்கு அரச/தனியார் மணமகன் உள்ளூர்/வெளியூரில் தேவை. விவாகரத்துப் பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். சீதனமுண்டு. தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(21726)

## பணிப்பெண் தேவை

இருவர் கொண்ட குடும்பத்துக்கு அவர்களுடன் தங்கியிருந்து பணியாற்ற பணிப்பெண் தேவை. தொடர்பு: A.கந்தசாமி, 15/2, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (21734)

## அறநெறிப் பாடசாலைக்கு நிதி வழங்க கோரிக்கை.

சண்டிலிப்பாய்,ஓக.23

சுழிபுரம் வடக்கிலுள்ள யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலையின் கட்டடத்தை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கும் -

ஷெல் தாக்குதல் காரணமாக சேதமடைந்துள்ள கிணற்றைப் புனரமைப்புச் செய்வதற்கும் -

நிதி உதவி வழங்கி உதவுமாறு அகதிகளுக்கான ஐநா. தூதரக யாழ் வதிவிடப் பிரதிநிதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அறநெறிப் பாடசாலை நிர்வாகம் கடித மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

வலிகாம் மேற்கு பிரதேச செயலரின் சிபார்சுடன் இதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## தொல்புரத்தில் நெற்செய்கையாளர் கலந்துரையாடல்

சண்டிலிப்பாய்,ஓக.23

தொல்புரம் விவசாயிகள் சம்மேளனம் நடத்தும் காலபோக நெற்செய்கை பற்றிய விவசாயிகளுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொல்புரம் கமநல சேவை கேந்திர நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளன தலைவர் ஞா.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தொல்புரம் கமநல சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ.குகநாதன் உட்பட மற்றும் பலர் கலந்துகொள்வர். விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இக் கலந்துரையாடலில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படவுள்ளது.

(எ-135)


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 27, ஆயிலியம் முதலாம் பாதம், லண்டனில் B.Sc., பொருளியியலில் சிறப்புப் பட்டமும் CIMA இறுதித் தேர்வு எழுத இருப்பவரும் லண்டன் நிரந்தர வதிவிட உரிமையுடையவருமான மணமகனுக்கு அழகிய, படித்த, நற்பண்ப மிக்க மணமகள் சீதனத்துடன் தேவை.

விள. இல. 1996,
C/o உதயன்.

(21702) (21-19-14-16)


முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

# உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை அனுபவம் நிறைந்தோரை இழக்கின்றோம்

## விளையாட்டு விழாவில் முன்னாள் அதிபர் தெரிவிப்பு

தொழிலுக்குரிய மரியாதையை வழங்கச் சமூகம் முன்வராமையும், உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாமையும் அனுபவம்மிக்க முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையை நாம் இழப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம்.

கொக்குவில் இந்து முன்பள்ளியின மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத் தலைவர் அ.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்பள்ளி ஆசிரியர்களின் கடமையானது மிகவும் கஷ்டமானது. மிகுந்த பொறுப்புடனும், மிகுந்த சிரமங்களின் மத்தியிலும் சேவைபுரியும் இவர்களுக்குத் தொழில் ரீதியான அந்தஸ்து வழங்கப்படுவதில்லை.

இதனால் அநேகமான ஆசிரியர்கள் திருமண பந்தத்தில் தம்மை இணைத்துக் கொண்டதும் இத்தொழிலில் இருந்து நீங்கி விடுகின்றார்கள். இது பற்றி யாரும் கவனத்திலெடுப்பதில்லை.

வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு முன்பள்ளிகளை நடத்தினால் அதில் எவ்வளவு பணம் கொடுத்தும் தமது சிறார்களைச் சேர்ப்பதற்குப் பெற்றோர்கள் முண்டியடிக்கின்றார்கள். ஆனால், இங்குள்ள முன்பள்ளிகளின் விடயத்தில் மட்டும் ஏனோதானோ என்ற போக்கையே அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

இங்குள்ள முன்பள்ளிகளைப் பொறுத்தவரையில் தன்னம்பிக்கை கொண்ட தலைமைத்துவத்தையும், உறுப்பினர்களையும் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

ஒரு மனிதனுடைய வளர்ச்சியில் பிறந்த நாள்முதல் ஐந்து வருடங்களுக்கான காலகட்டம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். இக்காலகட்டத்தில் குழந்தைகள் எதனைக் கற்றுக்கொள்கிறார்களோ? அனுபவிக்கின்றார்களோ? அதுவே அவர்களின் வளர்ச்சிப் பாதையில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாக அமையமுடியும்.

இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் உணர்வுகளை நன்கு அறிந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களுடைய எண்ணங்கள், கருத்துக்களையும் புரிந்து செயற்படுகின்றார்கள் இந்த நிலைமை பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சி நல்ல முறையில அமைவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கும்-என்றார். (எ-10-86)


உ
சிவமயம்

## விவாக சோபன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித் திங்கள் 7ஆம்நாள் (24.08.2003) ஞாயிற்றுக்கிழமை பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9.06 மணிமுதல் 11.52 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

சுன்னாகம் மயிலணி சிவன்கோயிலைச் சேர்ந்த சீவராமலிங்க ஐயரின் பௌத்திரனும் ஜெகநாத ஐயரின் புத்திரனுமாகிய சிரஞ்சீவி **சிவராம சர்மா** அவர்களுக்கு (மாரம்பைக்குளம் பிள்ளையார் ஆலய குரு. வவுனியா)

சதாசிவக் குருக்களின் பௌத்திரியும் சிவசுப்பிரமணியக் குருக்களின் புத்திரியுமாகிய செல்வி **ரஞ்சனி** அவர்களை (யா/திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியை)

கன்னிகாதான திருமாங்கல்யதாரணம் செய்ய இறைவன் திருவருள் கூடி, பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறவுள்ளதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பந்துமித்திரர் சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: **கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் கோயிலில் காலை 6.00 மணிக்கு நடைபெறும்.**

தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ திருமதி மீனாட்சி ஜெகநாத சர்மா
3/7, முதலாம் ஒழுங்கை, பட்டானிச்சூர்,
வவுனியா,
T.P.: 024 23784
பிரம்மஸ்ரீ சந்திரன் ஐயா
ஏழாலை, குப்பிளான்.

சிவஸ்ரீ திரு. திருமதி ச.சிவசுப்பிரமணியக் குருக்கள்
(யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய பிரதம குரு),
180, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
T.P.: 0777 240376

(இரு வீட்டார் அழைப்பு)

(21739) (24-14-18)



## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு பதினோராம் ஆண்டு



அமரர் அருளானந்தம் திருமேனி திருமதி திருமேனி சந்தனம்

03.06.1930 → மண்ணில் ← 08.08.1936
23.08.2002 → விண்ணில் ← 10.01.1992

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வளர்த்தீர்கள்!
இன்று எங்களை மறந்து எங்கே போய்விட்டீர்கள்?
ஆறவில்லை எம்துயரம் மாறவில்லை எம் கவலை!
நீங்கள் இல்லாத இல்லம் ஒளி இழந்து விட்டதே!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புனித மிக்கேல் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (21731) (25-21-14-18)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# கணனிகளை முடக்கிவிடும் வைரஸ் உலகம் முழுவதும் முன்னெச்சரிக்கை

வாஷிங்ரன்,ஓக.23

புதிதாக ஒரு கணனி வைரஸ் ஒன்று மின் அஞ்சல் ஊடாக கணனிகளைத் தாக்கலாம் என்று சர்வதேச அளவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் கணனிகளைத் தாக்கத் தொடங்கிய வைரஸ் குறித்த பிரச்சினை முடியுமுன் இந்த வாரமும் கணனிகளுக்குப் பெரிய தலைவலியை மற்றொரு வைரஸ் கொடுத்துள்ளது.

கடந்தமுறை வந்த 'பிளாஸ்டர்' வைரஸ் இணையத்தளம் வழியாக தாக்குதலைத் தொடுத்தது. ஆனால், தற்போது மின் அஞ்சல் வழியாக அனுப்பப்படும் 'சோபிக்' குடும்ப வைரஸ் ஒருமுறை கணனியில் இறங்கிவிட்டால் அங்கிருந்து பல்கிப் பெருகத் தொடங்கும். அந்தக் கணனியுடன் தொடர்புள்ள அனைத்து கணனிகளையும் அது தாக்கத் தொடங்கும். 'சோபிக் - எவ்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த வைரஸ் வந்தவுடன் உங்கள் கணனியில் தேவையற்ற கோப்புகள் குவிக்கத் தொடங்கிவிடும். பின்னர் கணனி இயக்கத்தையே முடக்கிவிடும்.

'மெசேஜ் லாப்ஸ்' என்னும் நிறுவனம் தங்களது வாடிக்கையாளர்களுக்கு இதுபோன்று அனுப்பப்பட்ட ஒரு லட்சம் வைரஸ்"களை நேற்று முன்தினம் தடுத்து நிறுத்தி அழித்தது. இதனால், உலகம் முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான கணனிகள் அன்று தப்பிவிட்டன. இன்றும் இந்த வைரஸ் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

இதுவரை அனுப்பப்பட்டுள்ள வீரியம் மிக்க 10 கணனி வைரஸ்களில் 'சோபிக்' வகையும் ஒன்று என்பதால் உலகம் முழுதும் இந்த வாரம் முழுவதும் மிகுந்த எச்சரிக்கையுடன் மின் அஞ்சல்களைக் கையாளவேண்டும்.

'மெசேஜ் பொக்ஸ்', 'சப்ஜெட்டில்', 'ரிப்ளை - டீடெய்ல்ஸ்', 'ப்ளீஸ் சீ த அட்டாச் பைல்' என்ற வாசகங்களுடன் வரும் மின் அஞ்சல்களைத் திறக்கக்கூடாது அப்படியே அழித்துவிடவேண்டும். ஒருவேளை, நீங்கள் அந்த இணைப்புக் கோப்பைப் பார்க்க நேர்ந்தால் 'பி.ஐ.எவ்.' கோப்புகள் உங்கள் கணனியில் இறங்கிவிடும். முகவரி தொகுப்புக்குச் சென்று அது உங்கள் நண்பர்களுக்குச் செய்தி அனுப்பத் தொடங்கிவிடும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதிவரை இந்த வைரஸ் பரவுவது நீடிக்கும் என்று கருதப்படுகிறது. 'எரோடிகா யூஸ்நெட்' இணைய இணைப்புள்ள கணனியில் 'போர்னோகிராபிக்' இணையத்தளம் படங்களை டவுண்லோட் செய்யும்போது இந்த வைரஸ் பரவிவிடும்.

'சோபிக்' வைரஸை பரப்பியவரை விரைவில் அமெரிக்க பொலீஸார் பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ-12)

# மூதூர் பகுதியில் அமைதி நிலவுகிறது; வழமைபோல சேவைகள் ஆரம்பம்

கடந்த சனிக்கிழமையிலிருந்து மூதூர் பகுதியில் நிலவிவந்த பதற்ற நிலை தணிந்து தற்பொழுது அமைதி நிலவுகிறது.

பஸ்சேவைகள், தபால்சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றன. அரச அலுவலகங்களும் இயங்குகின்றன.

மூதூர் - திருகோணமலை படகுச் சேவையில் தமிழ்மக்கள் பிரயாணம் செய்வதைக் காணமுடிந்தது.

எனினும், மூதூர் பகுதியில் தமிழ் மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகின்றது. பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மூதூர் நகரில் ரோந்து நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர். இரவு நேர பொலீஸ் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

# தென்பகுதி மக்களைத் தடுத்து நிறுத்தி திருப்பியனுப்பிய மடு பிரதேச மக்கள்!

## வீதிப் பயணத்துக்கு தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்குப் பதிலடி

மடு வீதியூடாக மடு மாதா ஆலயத்திற்கு வழிபாட்டுக்குச் சென்ற தென்பகுதி மக்களை கடந்த புதனன்று மடுப்பதி மக்கள் வழி மறித்துத் திருப்பியனுப்பியுள்ளனர்.

இவ்வீதியூடாக ஆலய வழிபாட்டுக்குச் செல்பவர்களை மட்டுமே இராணுவம் அனுமதிக்கின்றது. சொந்த அலுவல்களுக்காக இப்பிரதேச மக்கள் இவ்வீதியைப் பயன்படுத்த இராணுவம் தடைவித்துள்ளது.

எனவே, இத்தடையால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள், வழிபாட்டுக்குச் சென்ற தென்பகுதி மக்களைத் தடுத்து நிறுத்தி, நிலைமையை விளக்கிக் கூறி அவர்களை மன்னார் - உயிலங்குளம் வீதி வழியாக ஆலயத்துக்குச் செல்லுமாறு திருப்பி அனுப்பிவைத்தனர். அவர்களில் நோயாளிகளையும், வயோதிபர்களையும் மாத்திரம் மடு வீதி வழியே செல்ல பிரதேச மக்கள் அனுமதித்தனர்.

"இந்தப் பாதையைப் பயன்படுத்த எமக்கு மட்டும் ஏன் அனுமதி மறுக்கப்பட வேண்டும்? உங்களுக்கு வழங்கும் உரிமையைப் பிரதேச வாசிகளான எமக்கும் வழங்கவேண்டும்" என்று அவர்கள் தென்பகுதி மக்களிடம் எடுத்துக்கூறினர்.

# சு.க.வேட்பாளர் நியமனக் குழுக்கள் மாகாண மட்டத்திலும் நியமனம்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்காக மாகாண மட்டத்தில் வேட்பாளர் நியமனக் குழுக்களை நியமிப்பதென சுதந்திரக்கட்சி தீர்மானித்திருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் கடந்த திங்களன்று நடைபெற்ற சு.க.மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான தேசிய நியமனக் குழுவுக்கு மேலதிகமாகவே மாகாண மட்டக் குழுக்கள் நியமிக்கப்படவிருக்கின்றன.

இதற்கிடையே எதிர்வரும் செப்ரெம்பர் 2ஆம் திகதி குருநாகலையில் நடைபெறும் கட்சியின் 52 ஆவது வருடாந்த மாநாடு குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

(எ)

## விளையாட்டுக்கழக விவரம் சேகரிப்பு

கைதடி,ஓக.23

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் விவரங்கள் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வருடம் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய விளையாட்டுக்கழகங்கள் மற்றும் கழகங்களின் தலைவர், செயலாளர் விவரங்களே இவ்வாறு சேகரிக்கப்பட்டு வருகின்றன.(எ-75)



சவூதி அரேபியாவின் றியாத் நகரில் செயற்படும் இலங்கையர் கழகத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட மருத்துவ உபகரணங்களை றியாத் இராணுவ வைத்தியசாலையின் ஆலோசகர் டாக்டர் சிவசுப்பிரமணியத்திடம் இருந்து டாக்டர் பிரதீப்குமார் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (ஓ-10)

## சனசமூக நிலையப் புனரமைப்புக்கு நிதி

தென்மராட்சி,ஓக.23

யுத்தத்தினால் சேதமடைந்த மட்டுவில் வடக்கு, மோகனதாஸ் சனசமூக நிலைய கட்டடத்தினைப் புனரமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாவினை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

அத்துடன், சேதமடைந்த மட்டுவில் வடக்கு நெசவு நிலையம், சபீனா முன்பள்ளி ஆகியவற்றின் கட்டடங்களைப் புனரமைப்பதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்து வழங்குமாறும் -

அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதாகவும் - அவர் உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)



உலக உணவுத் திட்டத்தின் கீழ் அளவெட்டி அழகொல்லைக் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. யாழ். கமநல சேவைகள் திணைக்கள தலைமைப்பீட பெரும்பாக உத்தியோகத்தர் நா.குழந்தைவேல் அண்மையில் புனரமைப்பு வேலையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் கணலாம்.

கீரிமலை கமநல கேந்திரநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சாவித்திரிதேவி குகநேசன் மற்றும் அளவெட்டி விவசாயிகள் சம்மேளனத்தினரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)

## கல்வயல் பகுதியில் மிதிவெடி மீட்பு!

தென்மராட்சி,ஓக.23

கலவயல் கிராமத்தின் பெருங்குளம வயல்கள் பாரதி சனசமூக நிலையம் மற்றும் வயல்களை அண்டிய குடியிருப்புப் பகுதிகளில் மிதிவெடி, கண்ணிவெடிகள் மீட்கப்பட்டு வருகின்றன.

'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவன கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை மீட்டு செயலிழக்கச் செய்து வருகின்றனர்.(எ-117)

# பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவது குறித்து சங்கானையில் கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு,ஓக.23

சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவதற்கேற்ற நடவடிக்கைகளை மூன்றாம் தவணையில் மேற்கொள்வதற்கு அப்பிரதேச பாடசாலை அதிபர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதுதொடர்பாக சங்கானை கல்விக் கோட்ட காரியாலயத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அப்பகுதி பாடசாலை அதிபர்களும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு ஆசிரியர்களும் வெவ்வேறு அமர்வுகளில் கலந்துகொண்டனர்.

வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் இதன்போது கலந்துகொண்டு வேண்டிய ஆலோசனைகளை வழங்கினார்.

பொதுப் பரீட்சைகளின்போது மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேற்படி கூட்டததில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

★ 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான முன் ஆயத்த வகுப்புக்களை, பாடசாலைகளை தொகுதி ரீதியாகப் பிரித்து பரீட்சை வழிகாட்டல் வகுப்புகளை நடத்துவதுடன் மதிப்பீடுகள், பரிகாரக் கற்பித்தல் களையும் மேற்கொள்ளுதல்.

★ தரம் 11 வகுப்பு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்குப் பாடசாலைகளை தொகுதிரீதியாகப் பிரித்து பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் நடத்துவதுடன் மதிப்பீடுகள், பரிகாரக் கற்பித்தல்களையும் ஏற்பாடு செய்தல்.

★ தரம் 13 பரீட்சை எடுக்கும் மாணவர்களின் பாடத்திட்டங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முடிவடைவதற்குள் பூர்த்தி செய்து 2004 ஜனவரியில் இருந்து பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள், கருத்தரங்குகள் நடத்துதல்.

★ தரம் 13 வகுப்பு மாணவர்கள் பொதுச் சாதாரண பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை கோட்ட மட்டத்தில் ஏற்படுத்தல்.

★ விஞ்ஞானபாட செய்முறைகளை எல்லா மாணவர்களும் திறம்பட செய்வதற்காக மாணவர்களையும், ஆசிரியர்களையும் பொருத்தமான வகையில் தெரிவுசெய்து தொகுதி தொகுதியாக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் நடத்துதல். (எ-152)

## விடுதலைப் புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள்

# திருமலை சந்திப்பு நடைபெறவில்லை காலவரையறையின்றி ஒத்திவைப்பு!

திருகோணமலை கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சந்திப்பு இடம்பெறவில்லை. அச்சந்திப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அண்மைக்காலமாக திருகோணமலை, முதூர் பிரதேசங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து ஆராய்ந்து தீர்வுகாணும் பொருட்டே இந்தச் சந்திப்பு நடைபெறவிருந்தது.

எனினும், தவிர்க்கமுடியாத காரணத்தால் சந்திப்பு காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாகக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைக் கிளை அறிவித்துள்ளது.

# ஆனைப்பந்தி குருகுலத்தில் அந்தணருக்குப் பயிற்சிநெறி

வலிகாமம்தெற்கு,ஓக.23

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள வேதசிவாகம குருகுல கலாசாலையில் அந்தண சிறுவர்களின் கல்வி வளர்ச்சி, அறிவு விருத்தியை முன்னிட்டு பல பயிற்சிநெறிகள், வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கணனி, ஆங்கிலம், சோதிடம், பண்ணிசை, சைவசித்தாந்தம், தமிழ்மொழி, ஒழுக்கவியல், கிரியாவிளக்கம போன்ற துறைசார் வகுப்புகளும் பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

குருகுலத்தில் தங்கி நின்று கற்கும் மாணவர்கள், தினசரி வந்து செல்லும் மாணவர்கள் (அர்ச்சகர்கள்), வார இறுதி வகுப்பு மாணவர்கள் (பாடசாலை செல்வோர்) என மூன்று பிரிவுகளில் நடைபெறும் இவ்வகுப்புகளில் வயதுக்கட்டுப்பாடோ, தகுதிக் கட்டுப்பாடோ இல்லாமல் சகல அந்தணர்களும் பயனடையக் கூடியவாறு வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குருகுல மாணவர்கள் மாத்திரமன்றி ஏனைய அந்தண மாணவர்களும் பங்குகொண்டு பயன்பெறத் தக்கதாக பல புதிய செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்களினால் காலை 6 மணிதொடக்கம் சந்தியாவந்தனம், சமிதாதானம் செயல்முறை வகுப்புகளும் மாலை 7 மணி தொடக்கம் சூக்த வகுப்புகளும் உதகசாந்தி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மாலை ஐந்துமணி தொடக்கம் லலிதா சகஸ்ரநாம வகுப்புகளும் நடைபெற்றுவருகின்றன.

சூக்த வகுப்புகள், உதகசாந்தி வகுப்புகள், பாராயண வகுப்புகள் குருகுல மாணவர்களுக்கு உரியதென மட்டுப்படுத்தப்படவில்லை. அனைத்து அந்தணர்களும் கட்டுப்பாடு எதுவுமின்றி வந்து பயிற்சி பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் ஆரம்பமாகவுள்ள புதிய வகுப்புகளிலும் வைதீகக் கிரியா வகுப்புகளிலும் கலந்துகொள்ள விரும்புவோர் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் பெயர்களை பதிவு செய்துகொள்ளவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

# நெற்செய்கை மேற்கொள்ள வசதியாக கண்ணிகளை அகற்றித் தாருங்கள்

## அரியாலைப் பகுதி மக்கள் கோரிக்கை

கொழும்புத்துறை,ஓக.23

அரியாலைப் பிரதேசத்தில் இம்முறை காலபோகத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள படையினரால் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கும் கண்ணிவெடிகளை உடன் அகற்றித் தந்துதவுமாறும் விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகளைத் தந்துதவுமாறும் அரியாலை விவசாய சம்மேளனம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அனுமதிக்கப்பட்ட வயல் பகுதியை விவசாயிகள் பார்வையிட அவர்களை அங்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய சம்பந்தப்பட்ட விவசாயிகள் தமது பெயர் விவரங்களை அரியாலை விவசாய சம்மேளனச் செயலாளரிடம் பதிவுசெய்யுமாறும் இப்பட்டியல் 25ஆம் திகதிக்கு முன்னர் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-30)

## பாடசாலை அதிபர்களின் வாண்மைத் தேவைகள் பற்றி தரவுகள் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு,ஓக.23

தேசிய கல்வி நிறுவனத்தினரால் பாடசாலை அதிபர்களுடைய வாண்மைத் தேவைகள் தொடர்பாக தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

வலிகாமம் வலயப் பாடசாலை அதிபர்களின் தகவல்களை இது தொடர்பாகப் பெறுவதற்கான உரிய படிவங்களை உடனடியாக கோட்ட அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு அதிபர்களை பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் கேட்டுள்ளார். (எ-152)

## ஆங்கில தினம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.23

ஆங்கில தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் கீழ்ப்பிரிவு மற்றும் மேற பிரிவு குழுப்பாடல், நாடகப் போட்டிகளில் பங்குபற்றும் யாழ்.வலயப் பாடசாலைகளின் பொறுப்பாசியர்களுக்கும், ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளருக்குமிடையிலான முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## கணிப்பீடு தொடர்பாக வேம்படியில் செயலமர்வு

பாடசாலைகளில் 10ஆம் தரம் முதல் 13ஆம் தரம் வரை மேற்கொளளப்பட இருக்கும் பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான செயலமர்வொன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்ப்பாணம் வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், பரீட்சைத்திணைக்கள உத்தியோகத்தர்களால் நடத்தப்படவுள்ள இச்செயலமர்வுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடம் தொடர்பான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள போன்றோர் அழைக்கப்பட்டுள்ள னர். (எ-152)

## மீளக்குடியமர்ந்தோரை புலிகள் சந்தித்தனர்

கிளிநொச்சி,ஓக.23

வவுனியா வடக்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்துவரும் மக்களை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தலைமையிலான குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

வவுனியா பன்றிக்கெய்தகுளம் பாடசாலையில் நேற்றுமுன்தினம் காலையிலும் வவுனியா சேமமடுப் பாடசாலையில் அன்றையதினம் பிற்பகலிலும் இந்தக் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

சமகால விடயங்கள் குறித்தும் மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் குறிததும் சிறப்புரையாற்றிய துணைப் பொறுப்பாளர், மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்துகொண்டார்.

வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் மதன்ராஜ், வவுனியா வடக்கு நிர்வாக சேவைப் பொறுப்பாளர் நம்பி மற்றும் வவுனியா வடக்கு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீப் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-5)

## மோட்டார் இயந்திர இறக்குமதிக் கட்டுப்பாடு முழுமையாக நீக்கம்

படகுகளுக்கான மோட்டார் இயந்திர இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை அரசு முழுமையாக நீக்கியுள்ளது.

மீன்பிடித்துறை மற்றும் உல்லாசப் பயணத்துறை முதலானவற்றை விருத்திசெய்யும் நோக்குடனேயே அரசு படகுகளுக்கான இயந்திரசாதன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக நுகர்வோர் அமைச்சின் ஏற்பாட்டிலேயே இந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன என்றும், இனிவரும காலங்களில் எவரும் தாம் விரும்பியபடி படகு மோட்டார் இயந்திரங்களை இறக்குமதி செய்யமுடியும் எனவும் கூறப்பட்டது. (எ-12)

---

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட்

### சம்பளம் வழங்கல்

பரந்தன் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் 27.08.2003 (புதன்கிழமை) தொடக்கம் 30-08-2003 (சனிக்கிழமை) வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும்.

கா.சிவபாதசுந்தரம்
(தொழில் முகாமையாளர்)

(21711) (21-14-19)

---

### வேலை ஆள்கள் தேவை

புடைவைக்கடைக்கு வியாபாரம் செய்வதற்கு ஆளகள் தேவை. (அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

25.08.2003 திங்கட்கிழமை 10 மணி முதல் 4மணி வரை நேரில் வரவும்.

**றெஸ்பொயின்ட்**

(21724) 23, பெரியகடை, யாழ்ப்பாணம். (32-21-14-19)

---

### முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 18 - 05 - 1937



மறைவு 03 - 09 - 2002

அமரர்

**இராமலிங்கம் தில்லையம்பலம்**

*(ஓய்வுபெற்ற விவசாய அதிபர்)*

திதி: 23.08.2003

எங்கள் பாசத்திருவுருவே அப்பா!
எங்கள் மேல்பாசமழை பொழிந்தீரகளே!
எங்களை இப்பாரில் பரிதவிக்கவிட்டு
நீங்கள் பறந்தோடி ஓர் ஆண்டு ஆனதுவோ?
எத்தனை ஆண்டுகள் சென்று மறைந்தாலும்
உங்கள் திருவுருவம் எங்களால் மறக்க முடியுமோ?
உங்கள் நினைவால் நீர் சொரியும்
உங்கள் குடும்பத்தவர்

"கௌரி வாசா",
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(C/29641) (26-21-14-19)

---

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 09 - 1935



மறைவு 05 - 09 - 1999

**அமரர் வல்லிபுரம் அப்பாத்துரை**

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/வீமன்காமம் ம.வி)

திதி: 23.08.2003

ஆண்டுகள் நான்கு கடந்த பின்னும் - உங்கள்
அன்பான வார்த்தைகளும் அரவணைப்பும் என்றும்
எங்கள் நினைவுகளாய்த் தொடர்கின்றன உங்கள்
ஆத்மா சாந்தியடைய இந்நாளில் இறைவனை
வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிங்கம் லேன்,
உடுவில் கிழக்கு.

அன்பின் மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(21606) (26-14-19-21)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 1927 - 02 - 27



ஆண்டவன் திருவடியில் 2003 - 07 - 24

**திருமதி ஏகாம்பரம் ஞானம்மா**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் நீக்கமற நிலைத்துவிட்ட அம்மாவே!
வையத்துள் நாம் வாழும் காலம் வரை நீங்கள்
தெய்வமாக என்றும் எமக்கு வழிகாட்டி நிற்கவேண்டும் தாயே!

எமது குலவிளக்கு ஏகாம்பரம் ஞானம்மா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (23-08-2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் இந்நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*'சிவபுரம்',*
*நீதிமன்ற வீதி,*
*கொடிகாமம்.*

(21667) (26-21-19-14))

---

### 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 01 - 1918



உதிர்வு 23 - 08 - 1988

அமரர் **றிச்சேட் லூயிஸ்**

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்,
உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்)

"ஆண்டவரே உம்முடைய இரட்சிப்பின்
பேரில் ஆவலாயிருந்தேன் என்னுடைய
ஆத்துமா பிழைத்திருந்து உம்மைப் புகழும்"
(சங்.119:174)

ஆண்டுகள் பதினைந்து சென்றாலும்
எம் அன்புப் பப்பாவின் முகத்தை மறவோம்!

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமகன், சகோதரி,
பேரப்பிள்ளைகள்.

இல.219, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(21670) (26-21-14-19)

---




உலகப் புகழ் பெற்ற L.G
தொலைக்காட்சிப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# சமூக பங்களிப்புடன் பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள்

## 'யுனிசெவ்' அமைப்பு நடைமுறைப்படுத்தும்

வலிகாமம் தெற்கு,ஓக.23

"பாடசாலை அதிபர்கள், அபிவிருத்தி சங்கத்தினர் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் - சமூகத்தின் ஒன்றிணைந்த பங்களிப்புடன் - முதன் முறையாக 'யுனிசெவ்' நிறுவனத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு குடிதண்ணீர் வசதிகளும் சுகாதார வசதிகளும் செய்துகொடுக்கப்படவுள்ளன."

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இவ்வசதிகளை செய்துகொடுப்பது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது யுனிசெவ் நிறுவனத்தின் பிரதிநிதி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் கல்வி வலய பணிமனையில் கல்விட் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நிறுவனம் கடந்த காலங்களில் அரசாங்க அதிபர், பிரதேச செயலகங்கள் என்பவற்றின் ஊடாக பலதரப்பட்ட செயற்றிட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளது.

இம்முறை முதன்முறையாக பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்புடன் சில செயற்றிட்டங்களை நிறைவேற்ற உள்ளோம்.

எமது இத்திட்டத்தின் மூலம் மின்சார மோட்டார் பொருத்தப்பட்ட குடிதண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு நீர் விநியோகம் செய்வதற்கு வகை செய்யப்படும்.

மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் குடிதண்ணீர்த் தேவையைக் கருத்திற்கொண்டு மின்பிறப்பாக்கிகள் மூலம் நீர்த்தாங்கிக்கான நீரைப் பெறுவதற்கும் வகை செய்யப்படும்.

வலிகாமம் வலயம் போன்று ஏனைய வலயங்களிலும் இதுபோன்ற திட்டங்களைச் செயற்படுத்தவென ஒவ்வொரு வலயத்துக்கும் தலா இருபது லட்சம் ரூபா நிதியினை 'யுனிசெவ்' நிறுவனம் ஒதுக்கியுள்ளது.

இத்திட்டம் இவ்வருடம் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதால் மாணவர் நலன்கருதி விரைந்து செயற்பட வேண்டும் என 'யுனிசெவ்' பிரதிநிதி கூறினார்.

வலிகாமம் வலயத்தில் பிள்ளை நேயப் பாடசாலைகள் ஐந்து, தரம் III பாடசாலைகள் 13 என்பனவற்றுக்கு இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (ம-152)

# பாலர் அபிவிருத்தி நிலையங்களை பதிய சமுர்த்தித் திணைக்களம் நடவடிக்கை

கொழும்புத்துறை,ஓக.23

நாடு முழுவதுமுள்ள பாலர் அபிவிருத்தி நிலையங்களைப் பதிவு செய்து அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு சமுர்த்தி திணைக்களம் திட்டமிட்டுள்ளது.இதற்கான சுற்றறிக்கை அனைத்து சமுர்த்தி செயலகங்களுக்கும் சமுர்த்தி ஆணையாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பூர்வ பாடசாலைகள், பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், மொன்டிசோரி பாலர் பாடசாலைகள், சிறுவர் குழுக்கள், கீழ்ப்பிரிவு வகுப்புகள், நேசரி பள்ளிகள் போன்ற அனைத்து விதமான நிலையங்களையும் பதிவு செய்துகொள்ள முடியும்.

பதிவுசெய்யப்பட்ட நிலையங்களுக்கு அரச அங்கீகாரம், விசேட பயிற்சி வாய்ப்புகள், அனுபவங்கள், தரப்படுத்தலுக்கான அறிவித்தல், தேவைகளை ஈடுசெய்தல் போன்ற அனுகூலங்கள் கிடைக்குமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு பிரதேச சமுர்த்தி அலுவலகத்திலும் பெற்று சமுர்த்தி ஆணையாளர் நாயகம், 4ஆவது தளம், செத்சிரியாய, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-30)

# நல்லூரில் 'மஜிக் ஷோ'

யாழ்ப்பாணம்,ஓக.23

நல்லூர் உற்சவத்தையொட்டி கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மாயாஜால நிகழ்ச்சி இடம்பெற்று வருகின்றது.

தினமும் இரவு 7மணிக்கும் 8மணிக்கும் என இரண்டு காட்சிகளாக இந்த நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

துண்டுகளாக வெட்டப்பட்ட ஒரு மனிதன் இரு மனிதர்களாக வருவது, மூன்றடி நீளமான வாள் ஒன்றை வாயின் ஊடாக எவ்வித தடங்கலும் இன்றி உடலுக்குள் செலுத்துதல், குடையொன்று கண்முன்னே துணியிழந்து வெறும் கம்பியாக மாறுதல், கடதாசிகளை எரித்ததும் சுவையான இனிப்பு, ரொபி மற்றும் சிறிய பிராணிகளாக மாறுதல், சிறுவன் ஒருவன் தலையாலே பால்பருகுதல் உட்பட பல நிகழ்வுகள் இதில் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

இதனைக் காண்பதற்கு அதிக மக்கள் வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (ஒ-10)

## ஏழாலை வடக்கில்

# புனரமைத்த பாடசாலை இயங்குவதில் சந்தேகம்

வலி.வடக்கு,ஓக.23

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை அடுத்தாண்டு முதல் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இராணுவம் அதற்கு அனுமதி வழங்குமா எனத் தற்போது சந்தேகம் எழுந்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள கட்டடங்களை படையினர் அடையாளப்படுத்தி இடும் இலக்கம் இப்பாடசாலைக் கட்டடத்திலும் இடப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இச் சந்தேகம் அப்பகுதி மக்களிடையே தோன்றியுள்ளது.

கடந்த பதின்மூன்று வருடங்களாக இயங்காது இருந்துவந்த பாடசாலை இவ்வாண்டு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு அண்மையில் வைபவ ரீதியாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

இப்பாடசாலையை அடுத்தாண்டு முதல் ஆண்டு ஒன்றில் இருந்து இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வேளையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதாக இலக்கம் இடப்பட்டுள்ளமை பாடசாலை செயற்படுவதை கேள்விக்குறியாக்கி உள்ளது. (ஒ-86)

# கசிப்பு வைத்திருந்த வழக்கில் ஒரு லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஓக.23

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் 6 பேருக்கு யாழ்.நீதிமன்றம் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானசீலன் என்பவரை 60 ஆயிரம் தண்டப்பணமும்-

அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சிவகுமார் என்பவரை 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் -

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த தாமு சிவசாமி என்பவரை 40 ஆயிரம ரூபா தண்டப்பணமும் -

அரசடி வீதி கந்தர்மடத்தைச் சேர்ந்த கைலாசம் சிவமணி என்பவரை ஆயிரம் ரூபா தண்டப்பணமும்-

திருநகர் இராசசிங்கம் வீதியைச் சேர்ந்த அந்தோனிமுத்து விஜயகுமார் என்பவரை 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த தவராசா தர்சன் என்பவரை 7 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் கடந்த புதனன்று உத்தரவு பிறப்பித்தார். (எ-5)

## உள்ளூராட்சி மன்ற ஒழுங்குவிதிகளை சேகரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.23

ஒவ்வோர் உள்ளூராட்சி சபைகள் தொடர்பான துறைசார் கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் என்பனவற்றை தொகுத்து உள்ளூராட்சித் திணைக்களத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி சகல பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களையும் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளின் கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள், உபவிதிகள் என்பவற்றையும் - அவை பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் பிரதி, பிரசுரிக்கப்பட்ட திகதி, அவை தொடர்பான கோவைகளின் பிரதிகளையும் அனுப்பிவைக்குமாறும் - கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அனைத்து விவரங்களும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முதல் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் - கோரப்பட்டுள்ளது.(எ-185)

## ஓய்வறை இன்றி ஊழியர் சிரமம்

செம்பியன்பற்று,ஓக.23

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஊழியர்கள் தங்குவதற்கு ஓய்வறை இல்லை.

இதனால் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் மர நிழலிலும் கட்டடங்களின் தாழ்வாரப் பகுதியிலும் இருந்து மதிய உணவை உட்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது. (எ)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் எல்.திலகநாயகம்போலின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - ஆர்.ராதாகிருஷ்ணன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கெஞ்சிரா - கே.நந்தகுமார், - முகர்சிங் - வி.ரமணன் ஆகியோர் பற்கேற்கவுள்ளனர். (எ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 6 மணிக்கு 'நந்தியும் வந்தியும்' பற்றி சிவஸ்ரீ. சி.வை.நித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.(எ-10)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு திருமதி வயலற் சந்திரசேகரத்தின் வில்லுப்பாட்டு இடம்பெறும். (எ-10-30)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

இருபத்தியோராம் திருவிழா



## குறைவின்றி நல்லருளைக் கொடு

வீதிவலம் வந்தே வீணர் செயலொழித்தே
நீதியினைப் புகட்டுகின்ற நல்லூரா - சோதி
வடிவினனே எங்கள் வடிவேலழகனே முருகையா
விடிவொன்று தருவாய் விரைவாய்!

குகனே முருகா குவலயத்துக்கருள் குமரா
மகனே பார்வதி மகனே - சுகமே
உருவான வாழ்வை உலகில் தந்தே
தருவாய் அருளைத் தினமும்!

நல்லூரா அருளென்று நாளும் வேண்டினால்
அல்லலுறும் மாந்தரெலாம் அவனியிலே - நல்ல
வாழ்வை நித்தம் வளமாகப் பெற்று
தாழ்வை நீக்குவார் துணிந்து!

நல்லைக்கு வருவோரெல்லாம் நாதனென்று உன்னடியை
எல்லையின்றித் தொழுதே அழுதிடுவார் - தொல்லைக்கு
குறைவின்றி இந்தக் குவலயத்தில் வாடுவோர்க்கு
குறைவின்றி நல்லருளைக் கொடு!

- வதிரி த.அஜந்தகுமார்.

## அருள்வாய் அகம் மலரவே!

*தொல்லை தரும் இவ்வுலகில் அல்லல்படும் எம்மக்கள்*
*எல்லையில்லா படும் துயர் உன் கண்களில் படவில்லையா?*
*நல்லையில் நடம்புரியும் பல்கலைக் கந்தா*
*இல்லையோ உனது இரக்கம் இச்சோகம் தீர*
*வல்ல வளம் கொழிக்கும் நல்லூர்ப் பதியில்*
*சொல்ல முடியாது உன் அலங்காரத் திருவுருவை*
*எல்லாப் பதிகளையும் வலம் வந்த இந்த உருவுக்கு*
*நல்லதொரு காட்சி உன்னிடம் தான் கண்டேன்*
*அருள்வாய் அருள்வாய் சுகம் மலர எம்மக்கள்*
*அமைதியாய் வாழ உன் பாதம் பணிகின்றோம்.*

- உமா மகாலிங்கம்.

## பாமாலை சூடிடுவோம்!

உயிருடனே மெய்யுமாய்
உருவான கந்தா!
எயிறுடை அசுரரையே
வேலால் தடிந்தவா!
மயிலேறி வள்ளி தேவயானை
இரு மருங்கு மசைய
ஒயிலாக வீதியுலா வந்தே
அடியாருக் கருள்வாயே

தேமதுரத் தமிழோசை
திசையெ(ல்)லா மொலிக்க
தே மதுரத் தமிழாலே
பாமாலை சூடிடுவோம்
தேவனே! நல்லைநகர் மேவும்
கந்தா வரமருள்வாய்
தேராத உள்ளத்துள்
ஒளியும் ஏற்றிடுவாய்.

- யாழோன்.

## தில்லைக் கூத்தன் திருக்குமரா!

நல்லூர்க் கந்தனே நல்லருளாசி புரிபவனே
தில்லையிற் கூத்தன் திருக்குமரா!
அல்லல் அறுக்கும் ஆனந்த முருகா
எல்லையில்லா கருணை வழங்கும் ஏந்திழையால்
வள்ளி தெய்வானை மணாளா
தமிழர் குறை தீரவும் சமாதானம் நிலைக்கவும்
அருள்புரிந்து எம்மை காப்பாற்று கந்தா!

- க.ஆனந்தன்.

## வினையகற்றி அருள் புரிவீர்!

ஒரு நாளும் தொழுதறியாப் பாவியேனென் மேலிரங்கி
திரு முருகனைக் கெனைக் காட்டி உய்யவைத்த
ஒருகோட்டு முக்கண் கஜமுக இளவேந்தே நல்ல
திருப்பாக்கடமை அம்முருகன் மேல் பாடிட அருள்வீரே!

முல்லை முகை முறுவல் முருக்கின் பூவரத முருக
எல்லையிலாப் பெருங்கருணை வாதிரியே எழில்சேர்
நல்லை தனில் வந்து தொழுமடியார் துயர் நீக்கி
தொல்லை வினையுமகற்றி அருள் புரிவீரே!

பாலன் முருகனெனப் பன்னிய அச்சூரனும்
ஓலமுடன் வீழ்ந்தழுது உய்ந்திட்டான் ஞாலத்து
ஓலமிடும் தமிழர் உள்ளக் கொதிப்பதனை
காலம் தாழ்த்தாது தீர்த்திடுவாயிரங்கி.

- கட்டுவனூர் பொ.கனகரத்தினம்.

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்வியாண்டு 2004/2005

இலங்கை பல்கலைக்கழகங்களின்
பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி B.A.
- விஞ்ஞானமாணி B.Sc.
- வணிகமாணி B.Com.
- தொழில் நிர்வாகமாணி B.B.A.

க.பொ.த.உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
பல்கலைக்கழக பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.
விரிவுரைகள் 07.09.2003இல் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:
இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (21716)
(21-14-18)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 06 - 1928



மறைவு 03 - 09 - 2002

திருமதி
### மகேஸ்வரி செல்லத்துரை

திதி: 23.08.2003 அபரபக்க ஏகாதசி

ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாதம்மா எம் துயரம்
வேண்டுமென்றோ இறைவன் உம்மை விரும்பி அழைத்தானோ?
தவித்து வந்தோர் தன்மைகண்டு தாகம் தீர்த்து உணவளித்தீர்!
வாழ வழி அற்றோர்க்கு நல் வாழ்வுபெற வழி சமைத்தீர்!
இன்முகம் காட்டி இனிய மொழி பேசி அன்பாக எமை ஆதரித்த தெய்வமே!
வாரி அணைத்தெம்மை வளர்த்தெடுத்த வாரிதியே!
நூறாண்டு சென்றாலும் ஆறாது எம் துயரம்!

ஓம் சாந்தி!

சூழானை, சுன்னாகம்.
நாவலடி, கோப்பாய் மத்தி.
- குடும்பத்தினர்.

(21722) (24) (21-14-18)


## கிராமஅலுவலருக்கு பதவி உயர்வு

வரணி,ஓக.23

கடந்த ஆண்டு நடைபெற்ற கிராம அலுவலர் சேவையில் தரம் Iஇற்கு பதவி உயர்வு சார்பான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இடைக்குறிச்சி கிராம அலுவலர் ந.இராசகுமாரன், வெள்ளாம்போக்கட்டி கிராம அலுவலர் பொ.லோகேந்திரன் விடத்தற்பளை கிராம அலுவலர் க.நடராசமூர்த்தி ஆகியோர் சித்தியடைந்து தரம் Iஇற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர். (எ-170)

## பூநகரியில் மாணவருக்கு இலைக்கஞ்சி

செம்பியன்பற்று,ஓக.23

பூநகரி பாடசாலைகளின் மாணவர்களுக்கும் முன்பள்ளி சிறார்களுக்கும் இலைக்கஞ்சி வழங்கும் திட்டத்தை கியூடெக் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. (எ)

## நெடுங்கேணி பாடசாலைக்கு கணனிகள் அன்பளிப்பு

செம்பியன்பற்று,ஓக.23

நெடுங்கேணி மகாவித்தியாலயத்திற்கு இரண்டு கணனிகள் மற்றும் அதற்குரிய மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் மு.குகதாசன் தெரிவித்துள்ளார்.

இக்கணனி மூலம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் சாதாரண வகுப்பு மாணவர்களுக்கும் கணனிக் கல்வி கற்பிக்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

## கிளிநொச்சி ம.வியில் மாடிக்கட்டடம்

செம்பியன்பற்று,ஓக.23

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 47 லட்சம் ரூபா செலவில் இருமாடிக் கட்டடமும், ஒரு கோடியே 90 லட்சம் ரூபா செலவில் விஞ்ஞான கூடமும் அமைப்பதற்கு 'நிகொட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது. 'நிகொட்' நிறுவன கருத்திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் இதற்கான அடிகல்லை நட்டுவைத்தார். (எ)

## வீதி பலத்தசேதம்

யாழ்ப்பாணம்,ஓக.23

கோண்டாவில் சந்தியிலிருந்து இருபாலை நோக்கிச் செல்லும் கோணடாவில் - இருபாலை வீதி நீண்டகாலமாக திருத்தியமைக்கப்படாது காணப்படுகிறது.

குண்டும் குழியுமாக மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படும இவ்வீதி வழியாக தினமும் பெருமளவிலானவர்கள் பயணிப்பது குறிப்பிடத்தக்கது. (எ-69)

## தளபாடக் கொள்வனவுக்கு நிதியுதவி

யுத்த நடவடிக்கைகளினால் சேதமடைந்த கைதடி கிழக்கு ஜான் பாலர் பாடசாலைக்கு நோர்வே நாட்டில வசிக்கும் கைதடி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் திருநாவுக்கரசு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக நிதியுதவி வழங்கியுள்ளார். (எ-75)

## ஆசிரியப் பணிக்கு இலக்கணமான ஆசிரியர் பிரான் பண்டிதர் இராசையா

ஆஸ்திரேலியாவில் சமீபத்தில் அமரத்துவம் எய்தியவரான ஆசிரியா பிரான் பண்டிதர் சுப்பிரமணியம் இராசையா அவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். இவர் உலகப்புகழ்பெற்ற இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவாகளின் தலை மாணாக்கர்களில் ஒருவராவார். புகழ்பூத்த அதிபர் மயிலிட்டி சி.சுவாமிநாதன், 'அளவெட்டி தந்த அறிவுச் செல்வம்' என்று பாராட்டப்பட்டவரான மௌன தவமுனிவர் உபஅதிபா பொ.கைலாசபதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரிடத்தில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிற பயிலும் பாக்கியத்தைப்பெற்றவர் பண்டிதர் சு.இராசையா அவர்கள்.

### நீத்தார் நயப்புரை

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பல்கலைக்கழகம் போல விளங்கியது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் மாணவர்கள் இங்கு தேடிவந்து கல்வி பயின்றார்கள். கல்வித்துறையில் நல்ல பெறுபேறுகளையும் பெற்றனர். கற்பித்தல் முறையில அங்கு நல்வழி காட்டியவர்களில் முக்கியமான ஒருவர் பண்டிதர் சு.இராசையா அவர்கள்.

முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரியர் கலாசாலை புகுமுகப் பரீட்சைக்குரிய வகுப்பும் அன்றைய காலத்தில் நடைபெற்றுவந்தது. பணடிதமணி, பண்டிதர் சு.இராசையா, பண்டிதர் செ.துரைசிங்கம் ஆகியோர் இதற்கான விரிவுரையாளர்கள். அந்த வகுப்பிற் சேர்ந்து கற்றவர்கள் பெரும்பாலும் பரீட்சையில் தேறி ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து பயின்று ஆசிரியர்களாக வெளியேறினர்.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் நீண்டகாலம் உதவி. ஆசிரியப்பணி புரிந்த பண்டிதர் சு.இ. அவர்கள் அட்டாளைச்சேனை, கோபபாய், கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலைகளில் விரிவுரையாளராகத் தொடர்ந்து பணிபுரிந்தார். பண்டிதர் அவர்கள், கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையிலிருந்து ஓய்வுபெற்ற சமயம் குறித்த ஆசிரியர் கலாசாலைச சமூகம் எடுத்த பாராட்டுப் பெருவிழா இப்பொழுதும் எங்கள் நெஞ்சங்களில் நிழலாடிக்கொண்டு இருக்கிறது.

சிறந்த கவிஞராகவும் பண்டிதர் அவர்கள் திகழ்ந்தார். அவரது கவிதைகள் இலக்கண சுத்தம் உடையனவாக இருக்கும். தெய்வங்கள் மீது அவர் பாடி இருக்கின்றார்.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து வரும் இந்த நாள்களில் மனிதனுடைய வாழ்க்கை வட்டமும் குறுகிக் கொண்டே போகிறது. பிறந்த ஒருவர் ஆயிரம் பிறைகண்டு முதுமைப் பருவத்தில் இயற்கையெய்தினால் அது அவருக்குரிய பெருமை என்று பேசப்படுகிறது. புகழ்பூத்த பண்டிதர் சு.இராசையா அவர்கள் ஆயிரம் பிறைகண்டு அதற்கு மேலேயும் நூறுபிறை வரைகண்டு இயறகையெய்தியமை (91 ஆவது வயதில்) அவர்பெற்ற பெரும்பேறு எனலாம்.

ஆசிரியமணி *அ.பஞ்சாட்சரம்*


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்ணாகத்தைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியரும்
சிறந்த சமூகசேவையாளருமாகிய
**உயர்திரு. செ.வைத்தியலிங்கம்**
அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம்
பெற்றதையிட்டு அவரை மிக்க மகிழ்ச்சியோடு
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம். (21730) (24-21-14-18)
- உறவினர்கள்.



## வேலை ஆள்கள் தேவை

பிரபல சைவ உணவகத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட வேலைகளுக்கு வேலை ஆள்கள் தேவை. விரும்புவோர் 31.08.2003ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

1. உணவு பரிமாறுவோர் (சப்ளையேர்ஸ்)
2. தேநீர் தயாரிப்பாளர்
3. சமையல் வேலை செய்வோர்
4. கைவேலையாள்கள்
5. உதவியாளர்கள்
6. காசாளர் (பெண்)

சம்பளம் பேசித்தீர்மானித்துக்கொள்ளப்படும்.

தொடர்புகொள்ளவேண்டி முகவரி:
விளம்பர இலக்கம்: 1997,
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(21732) (24-21-14-18)



## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி பேரம்பலம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், தலையாழியை வசிப்பிடமாகவும் யா/இந்து ஆரம்ப பாடசாலையின் நீண்டகால ஆசிரியரும் யா/கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியருமான திருமதி பேரம்பலம் பாக்கியலட்சுமி அவர்கள் 20-08-2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் பேரம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - அன்னபூரணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம்பிள்ளை, பராசக்தி ஆகியோரின் சகோதரியும் அன்பழகன் (லண்டன்), சந்திரிகா (கனடா), அறிவழகன் (ஆஸ்திரேலியா), வேணுகா சண்முகரட்ணம் (பிரதி அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), அருளழகன் (கனடா), அம்பிகா (டாக்டர், யாழ். வைத்தியசாலை), மதியழகன் (லண்டன்), சசிலேகா (கனடா), மணியழகன் (லண்டன்), மெய்யழகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தமிழரசி, பரந்தாமன், கருணை ஈஸ்வரி அம்பிகை, சண்முகரட்ணம், சாந்தி, சிறிஸ்கந்தராஜா (டாக்டர், யாழ்.போதனாவைத்தியசாலை), பிரேமகுமாரி, சேந்தன், பாமலா, வேதநாயகி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்வன், மயிலோன், நயனி, உமா, பிரணவன், பார்த்தீபன், திலீபன், லிதுசன், கிரிஜா, மாதுளா, ஆதவன், செந்தூரன், நிலானி, உமையாள், ராகுலன், ஷோபன், அருணி, ஷாலினி, அஞ்சலி, அபிராமி, விசாகன், சுஜிந்தன், ஜதுஷா, ஜனகன், அஞ்சலா, லக்ஸ்மன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24-08-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தலையாழி,*
*கொக்குவில்.*
(21675) (21-14-18)

தகவல்:
வை.பேரம்பலம் (கணவர்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## பரத நாட்டிய அரங்கேற்றம்




சாவகச்சேரி
திலகநர்த்தனாலயம் வழங்கும் நாட்டியக் கலைமணி
திருமதி யசோதரா விவேகானந்தன்
அவர்களின் மாணவி
**செல்வி சிவறஜி சிவசுப்பிரமணியம்**
அவர்களது பரத நாட்டிய அரங்கேற்றம்

காலம் : நாளை (24.08.2003) ஞாயிறு காலை 9.30மணி
இடம் : நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்
பிரதமவிருந்தினர்: திரு.செ.பத்மநாதன் (அரசாங்க அதிபர் யாழ் மாவட்டம்)

*அணிசெய் கலைஞர்கள்*
நட்டுவாங்கம்
நடனஅமைப்பு: *நாட்டியக் கலைமணி*
திருமதி யசோதரா விவேகானந்தன்
*பாட்டு : சங்கீதபூஷணம்* திரு.பொன் ஸ்ரீவாமதேவன்
*வயலின்: இசை ஞான சுரபி திரு.அ.ஜெயராமன்*
*கீபோட் : இசைக்கலைமணி திரு. ந.செல்வச்சந்திரன்*

கலை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்

மகளிர் பாடசாலை வீதி,
கற்குளி, சாவகச்சேரி. (21672)(21-14-18)
திரு.திருமதி சிவசுப்பிரமணியம்





யாழ். சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வு மற்றும் சித்தாந்த பண்டிதர் பட்டப் பட்டமளிப்பு விழா அண்மையில் நிராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன. இந்த விழாவில் யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினரான மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் சைவநெறித் தேர்வு மற்றும் சித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களில் தலா ஒவ்வொருவருக்குப் பரிசில் வழங்குவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (எ)

# தமிழைச் செம்மொழியாக்க தமிழகத்தில் தொடரும் முயற்சி

- பாமரன் -

இந்தியாவில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்கும்படி கடந்த நூறு ஆண்டுகளாகவே குரல் எழுப்பப்பட்டு வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் உள்ள அரசியல்வாதிகளும் சரி, அவர்கள் சார்ந்த கட்சிகளும் சரி வேறுபாடுகளை மறந்து இக்கோரிக்கையை காலங்காலமாக மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டால் அதன் மகத்துவம் உலக அளவில் அங்கீகரிக்கப்படும் என்று இவர்கள் தமது கோரிக்கைக்கு ஆதரவு தேடுகிறார்கள்.

ஆனால், வட இந்தியத்தலைவர்களோ தமிழை செம்மொழியாக அறிவிப்பதால் பயனேதும் பெரிதாகக் கிடைத்துவிடாது என்ற பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். ஆனால், சமஸ்கிருதத்தை செம்மொழியாக இந்திய அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில், தமிழை செம்மொழியாக அறிவிக்கக்கோரி, தமிழ் அறிஞர்கள் கடந்த திங்கட்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதே சமயம் இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக்கட்சியின் தமிழகத் தலைவர்கள் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டால் என்னென்ன பயன்கள் கிடைக்கும் என்பது குறித்து தமிழகப் பத்திரிகையான தினமணி தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு.

முதலாவதாக தமிழுக்கு உலக அளவில் அங்கீகாரமும் மதிப்பும் உயரும்.

பண்டைய மொழிக் கலைக் களஞ்சியங்களில் தமிழ் இலக்கியங்கள், கட்டுரைகள், வரலாறு, பண்பாட்டுக் கருத்துகள் இடம்பெறும்.

பல்கலைக்கழகங்களில் தமிழ் தற்போது கீழ்த்திசை மொழியாகக் கருதப்படுகிறது. இந்நிலை மாறி, இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் உலகப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ்மொழிக்குத் தனி இருக்கை நிறுவப்படும். அத்துறைகள் தனித் தன்மையுடன் செயற்பட வாய்ப்பு ஏற்படும்.

சமஸ்கிருதத்துக்கு மத்திய அரசால் நேரடியாக இந்தியப் பணத்தில் ரூ.40 கோடியும், அரசுசார்பு நிறுவனங்கள் மூலம் ரூ.100 கோடியும் ஒதுக்கப்பட்டு, அதன் வளர்ச்சிக்கு உதவப்படுகிறது. அதேபோல் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் உதவி கிடைக்கும்.

தமிழகத்திலும் இந்தியாவிலும் கல்வெட்டு ஆய்வு, ஓலைச்சுவடி ஆய்வுகள் சமஸ்கிருதத்தை மையமாகக் கொண்டே ஆராயப்படுகின்றன. இந்நிலையில், தமிழை மையமாகக் கொண்டு உண்மையான வரலாற்றுப் பண்பாட்டுக் கருத்துகள் வெளிவர முடியும்.

ஹிந்தி உட்பட பிறமொழி பேசும் மக்கள் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டு தொன்மையும் பழம் பெருமையும் உடையது என அறிய வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துள்ளது.

தமிழைமேம்படுத்த தமிழகம் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆனால, தமிழருக்கும், தமிழினத்திறகும் உலகளவில் முகவரி தேடித்தந்த ஈழத்தமிழர் தாயகத்தில் தாம் உயர தமிழைப் பயன்படுத்துவோரே மலிந்து கிடக்கின்றனர். இந்தகையோர் இனியாவது தமிழ் உயர ஏதேனும் வழிதேடுவரா?

## மக்கள் முகம்



வல்வெட்டி, சமரபாகுவைச் சேர்ந்த மயிலு சத்தியநாதன் யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சமூக சேவையாளரான இவர், கரணவாய் வடக்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயிலின் முன்னாள் செயலாளரும், முன்னாள் பொருளாளருமாவார்.

யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி பழைய மாணவனான இவர் வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (எ-15)

★ ★ ★ ★



நவாலி சென்.பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலையின் அதிபரான சிறில் சுகந்தரன் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பெல்மதுளைக் கிளை, யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம், நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், நவாலி சென். பீற்றேஸ் ஆலய பரிபாலன சபை ஆகியவற்றின் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

★ ★ ★ ★



வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைச் சேர்ந்த கனகசுந்தரம் கலியுகவரதன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்று மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.

மல்லாகம் வடக்கு கிராம சேவையாளரான இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார். (எ-150)

★ ★ ★ ★



நாவாந்துறை தெற்கு, கண்ணபுரத்தைச் சேர்ந்தவரும் யாழ். மாநகர சபையின் மத்திய சந்தைப் பொறுப்பாளராக நீண்டகாலம் பணிபுரிந்து ஓய்வுபெற்றவருமான வேலன் சின்னத்தம்பி மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாகப் பதவி யேற்றுள்ளார். இவர் கொட்டடி நமசிவாய வித்தியாசாலை, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். (எ)

★ ★ ★ ★



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமேனி நடராஜா அண்மையில் யாழ். மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்

இவர், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது ஆசிரியரும் ஆவார். இவர் பயிற்றப்பட்ட சுயபாஷா ஆசிரியராகவும், கணித விசேட பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், ஆங்கில ஆசிரியராகவும் 38 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். (எ)

★ ★ ★ ★



நாவலடி. உடுப்பிட்டியைச் சேர்ந்த கொ.குணசிங்கம் அண்மையில் யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்

இவர் வடமராட்சி மேற்கு பிரதேச சபை ச.சநி. சமாசத்தினதும், திடல் பத்திரகாளி அம்பாள் ஆலயம், சி.க.வ.கூ. சங்கம் ஆகியவற்றினதும் துணைத் தலைவராகவும் பதவி வகித்துவருகிறார்.(எ-70)

# தவறிழைப்போரை களையெடுப்பதில் பொலீஸ் ஆணைக்குழு கூடிய அக்கறை

## 'லங்காதீப' பத்திரிகை தகவல்



கொழும்பு,ஓக.23

இலங்கைப் பொலீஸ் திணைக்களத்தில் தவறிழைக்கும் அதிகாரிகளை பதவிநீக்கும் நடவடிக்கையில் பொலீஸ் ஆணைக்குழு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

- இவ்வாறு 'லங்காதீப' நாளிதழில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்காவின் சனத்தொகையின் ஒவ்வொரு 283 பொதுமக்களுக்கும் ஒருவர் என்ற விகிதத்தில் நாட்டில் பொலீஸ் உத்தியோகத்தர்களின் தொகை இன்று காணப்படுகிறது. அவ்விதம் பொலீஸ்துறை உத்தியோகத்தர் ஆறுபேர் அண்மையில் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். பன்னல, கலவான, சூரியவெவ, ஹிணுகல, வரக்காபொல மற்றும் வந்துரம்ப ஆகிய பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளே பொலீஸ் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைய தமது பதவிகளின்றும் நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாதாள உலகக் கும்பலுடன் நெருங்கிய தொடர்பு பேணி வந்தது மட்டுமன்றி, தமது பிரதேசத்தில் சட்டதிட்டங்களையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் பணியில் அக்கறை செலுத்தத் தவறியதான குற்றச்சாட்டுக்கும் உட்படுத்தப்பட்டிருந்ததாகப் பொலீஸ் தலைமைக் காரியாலயச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் ஒருசிலரது பதவிகள் மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவிப் பொலீஸ்மா அதிபர்களின் சிபார்சுகளுக்கமையப் பறிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகள் தொடர்பாக விசுவாசத்துடன் செயற்படாமை, தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

இவர்களில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியொருவர் மதுபோதையில் தமது உத்தியோகபூர்வ வாகனத்தைச் செலுத்திச் சென்ற சமயம் விபத்தில் சிக்கிக்கொண்டதாகக் கூறப்படுகிறது. அச்சம்பவத்தில் அவர் செலுத்திச் சென்ற வாகனத்துக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அந்த உத்தியோகத்தர் அவ்வாகனத்தை இரகசியமாக 'கராஜில்' மறைத்து வைத்து அதனைத் திருத்தம் செய்வதற்கு முயற்சித்துள்ளார். ஆனால், திருத்தம் செய்யமுடியாத அளவுக்கு அவ்வாகனம் சேதமுற்றிருந்ததாகத் தெரியவருகின்றது. இந்நடவடிக்கை காரணமாகவே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பொலீஸ்மா அதிபர் ஏ.ஈ.ஆனந்தராஜா இதுதொடர்பாக பொலீஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கிய சிபார்சை அடுத்து பொலீஸ் ஆணைக்குழுவினால் குற்றஞ்சாட்டப்பட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலீஸ் ஆணைக்குழுவின் உறுதியான நடவடிக்கைகள் காரணமாக பொலீஸ் அதிகாரிகள் தமது கௌரவத்தைப் பேணிக்கொள்ளும் விதத்தில் தமது பதவிக்குரிய மதிப்புடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக பொலீஸ் தலைமைக் காரியாலய சிரேஷ்ட உதவிப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொலீஸ் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் காரணமாகத் தற்போது பொலீஸ் அதிகாரிகளினால் சுதந்திரமாகச் செயற்பட முடிகிறது. அழுத்தங்கள் காரணமாக அவர்கள் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட யுகம் தற்போது மாறிவிட்டது. ஒரு புதிய பொலீஸ் நிலையத்தில் கடமையேற்று தொடர்ந்து மூன்று ஆண்டு காலத்துக்கு அங்கேயே கடமையாற்றக் கூடியவிதத்திலான நீதி நடைமுறை தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. கடமையைச் சரிவர நிறைவேற்றத் தவறுவதான குற்றச்சாட்டு அல்லது உடல் ஆரோக்கிய நிலை சீர்கெடுதல் அல்லது அவசரமான அசாதாரண சூழ்நிலையொன்றை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் ஆகிய காரணங்களிலொன்றின் பொருட்டன்றி வேறு சந்தர்ப்பங்களில் எந்தவொரு பொலீஸ் அதிகாரியும் ஒரு பொலீஸ் நிலையத்தில் கடமையேற்ற நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டு காலம் சேவையாற்ற இயலும். இதன் மூலம் மனத்திருப்பதியுடனும், உற்சாகமாகவும் தமது கடமைகளை மேற்கொள்ளத்தக்க வாய்ப்பு பொலீஸ் அதிகாரிகளுக்குக் கிட்டியுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் எவராவது நீதிவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவாராகில் அவர்கள் தண்டனை பெற வேண்டியவர்களே.

நாட்டுக்குக் கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தல், துணிச்சலுடன் செயற்படுத்தல், குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுதல் மற்றும் விசேட விளையாட்டுத்துறை நடவடிக்கைகளில் திறமையை வெளிப்படுத்தல் ஆகிய நாட்டுக்குக் கௌரவத்தையும் புகழையும் ஈட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளில் திறமை காட்டுவோருக்கு பதவி உயர்வு வழங்கும் நடைமுறை பொலீஸ் திணைக்களத்தில் கடைப்படிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், கடந்த ஏழுமாத காலமாக இந்த வகையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. அதற்குப் பதிலாக, பதவி உயர்வுகள் வழங்குவது தொடர்பாக பொதுவான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பொலீஸ் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகச் சிரேஷ்ட உதவிப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வுகள் தொடர்பாக நடத்தப்படவேண்டிய பரீட்சைகள் பல காலமாக நடத்தப்படவில்லை. ஆகவே, சேவை மூப்பின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடத்தித் திறமையின் அடிப்படையில் பதவி உயர்வுகளை வழங்குமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. அதன்படி ஏறக்குறைய ஆயிரத்து 800 பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கும் 700 பேர் வரையிலான உதவிப் பொலீஸ் அதிகாரிகளுக்கும் 400பேர் வரையிலான பொலீஸ் அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு பெறுவதற்கான தகுதிகள் தற்போது உள்ளன. ஆகவே, கடமையில் தவறு இழைக்கும் பொலீஸ் உத்தியோகத்தரொருவர் அவர் எந்தத் தரத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் அவர் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டாக வேண்டியிருக்கும்.

பதவிகளை இழந்த பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு எதிராகப் பொலீஸ் தலைமையகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

சர்வதேச அஞ்சல்தினத்தை முன்னிட்டு மாணவர் மத்தியில் நடத்தப்படவுள்ள சித்திர, கட்டுரை, முத்திரை சேகரித்தல் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. யாழ் பிராந்திய அஞ்சல் அலுவலக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

மாணவர்கள் தமது ஆக்கங்களைப் பாடசாலை அதிபரினூடாக யாழ். பிராந்திய அஞ்சல் அதிபரின் அலுவலகத்திற்கோ அல்லது அந்தந்தப் பகுதி அஞ்சல் அலுவலகங்களினூடாகவோ அனுப்பிவைக்க முடியும் எனவும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-12)

## சமாதான நீதிவானுக்கு பாராட்டுவிழா

சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ள உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த கொ.குணசிங்கத்துக்கான் பாராட்டுவிழா நாளைமறுதினம் பிற்பகல் 3 மணிக்கு நாவலடி கிராம பொது அமைப்புகளால் மாணவர்மன்ற மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், த.வி.கூட்டணியின் வடமராட்சி அமைப்பாளர் எஸ்.அரவிந்தன், வைத்தியகலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-10-70)

# சுயதேவைக்கு வீதித்தடைகள்!

கரவெட்டி,ஓக.23

வடமராட்சியில் சில வீதிகளில் தனியார் தமது சுயதேவைகளுக்காக ஏற்படுத்தியுள்ள வீதித்தடைகளால் போக்குவரத்தில் இடையூறு ஏற்பட்டுள்ளது.

வடமராட்சியின் சில கிராமப் பகுதிகளில் இத்தகைய வீதித் தடைகள் எவ்வித அனுமதியுமின்றி வீதிகளுக்குக் குறுக்காக மணல் மேடுகள், மரக்குற்றிகள் போட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுபற்றி கரவெட்டி, பருத்தித்துறை போன்ற இடங்களின் பிரதேச செயலகங்கள், பிரதேசசபைகள் போன்றவற்றில் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஓ-70)

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஓக.23

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் முத்தமிழ் விழாவும், முன்னாள் அதிபர் அமரர் இ.கந்தையாவின் 90ஆவது பிறந்ததின வைபவமும் நாளைமறுதினம் திங்கட கிழமை பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள இ.கந்தையா ஞாபகார்த்த பிரார்த்தனை மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் இ.சிவபாதசேகரம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி க.சொக்கலிங்கம் கலந்து கொள்வார். (எ-69)

## வீதியின் நடுவே அபாயம்

கொழும்புத்துறை,ஓக.23

யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள தொலைத்தொடர்பு இணைப்புகளுக்கான நிலத்தடி அறையின் மூடி கடந்த சில நாள்களாக உடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால், வாகன சாரதிகளும் பொதுமக்களும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

(ஓ-30)

# ஒரு வயதுக் குழந்தைகளுக்கு 150 ரூபா போஷாக்கு முத்திரை

கொழும்புத்துறை,ஓக.23

சமுர்த்தி அமைச்சின் விசேட போஷாக்கு முத்திரை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தலா 150 ரூபா வீதம் 12 மாதங்களுக்கு போஷாக்கு முத்திரை வழங்கப்படவுள்ளது.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத தாய்மார் தத்தமது பகுதி சமுர்த்தி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சமுர்த்தி ஆணையாளர் கேட்டுள்ளார்.(ஓ-30)

# 15ஆவது வருட நிறைவு

## திருமண வாழ்த்து



கைதடி வடக்கைச் சேர்ந்தவர்களும் சுவிஸை வசிப்பிடமாகக் கொண்டவர்களுமான

**திரு. திருமதி செல்லத்துரை -ஸ்ரீமகள்**

**(துரை) (வேணி)**

தம்பதிகள்

பூவும் மணமுமாக பூமியில் இல்லறத்தை
நல்லறமாகச் சிறப்பிக்கும் இவர்கள்
தாம் இணைந்து 15 வருடங்கள்
நிறைவடைந்த வெற்றியை இன்று (23.08.2003)
உற்றாரும் சுற்றமும் புடைசூழ
அரங்கேற்றுகின்றனர். இவர்களின்
இன்றைய சிரிப்பு என்றும் நிலைக்க வேண்டும்
என வாழ்த்தி கயிற்றசிட்டி

கந்தனருள் வேண்டி நிற்கும்:

அம்மா, அக்காமார்கள்,
அத்தான்மார்கள்,
மகன்மார்கள், மகள்.

திருமதி அ.வீரகத்தி,
*"ஸ்ரீநிகேதம்"*
*கைதடி வடக்கு, கைதடி.*

(21749) (24-14-16)

**விற்பனையாளர்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்பு:
**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
44, 42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(21708) (21-14-16)

**WANTED**

WELL ESTABLISHED ORGANI ZATION IN JAFFNA

Need a Retired Govt-Officer for administration Preferance will be given to thouse who have experience in hotel Management of marketing.

**PILLAIYAR STORES**
31, Manipay Road,
Jaffna,

(21743)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை

## சமயாசமய சுகாதார தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம்

மேற்படி பதவிக்கு சமயாசமய அடிப்படையில் ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி *'செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை, ஊர்காவற்றுறை'* என்ற முகவரிக்கு 08.09.2003ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

*இப்பதவிக்கான தகைமைகள் வருமாறு:-*

01. ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
02. 18 வயதுக்கு குறையாமலும் 45 வதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
03. 05ஆம் தரம் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**பிரதேச சபை அலுவலகம்,**
**ஊர்காவற்றுறை.**
21.08.2003 (C/29699)

கு.கணேசலிங்கம
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

## மூன்றாவது வருட நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 20 | 23 |
| - | - |
| 06 | 08 |
| - | - |
| 1975 | 2000 |

**அமரர் சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன்**

மூன்று வருடமும் ஆயிற்றோ எம் செல்வமே!
'ஈன்றபொழுது மகிழ்வு தந்த இலங்கேஸ்வரனே!
சான்றோனாய் வாழ்ந்து எமை மகிழ்விக்காமல்
தோன்றி மறைந்து விட்டாயே என் செய்வோம்?
உன் திருமுகத்தை எம்மால் மறக்க முடியுமா?

– குடும்பத்தினர்.

அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய்.

(21744) (21-19-14-16)

## இந்தியாவில் கல்வி வாய்ப்பு

**Don Bosco கல்வி நிறுவனங்கள், பெங்களூர்.**

- ✦ தொழில்நுட்பக் கல்வி அனைத்து இந்திய சபை புதுடெல்லியில் (All India) Council technical Education - New delhi ஆல் அங்கீகரிக்கப்பட்டது.
- ✦ விஸ்வேஸ்வர்ராஜ தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் இணைந்த பல்கலைக்கழகம்.
- ✦ பெங்களூர் பல்கலைக்கழகத்தின் இணைந்த பல்கலைக்கழகம்.
- ✦ கர்நாடக அரசினால் அங்கீகரிக்கப்பட்டது.

*தலைமைக் காரியாலயம்:*

**இல.475, 9ஆவது பிரதான வீதி,**
**5ஆவது Block, ஜெகநகர்,**
**பெங்களூர் - 560041**

**T.P.: 6653248**
**Fax: 6634908**
**Residence 2721974**

**பாடநெறிகள்**

**இலத்திரனியல் இளமாணி (B.E Degree)**

- ✶ இலத்திரனியலும் தொடர்பாடலும் (Electronics & Communication)
- ✶ இயந்திரப் பொறியியல் (Mechanical Engineering)
- ✶ இலத்திரனியலும் மின்னியலும் (Electronics & Electricals)
- ✶ தகவல் விஞ்ஞானம் (Information Science)
- ✶ கணனி விஞ்ஞானம் (Computer Science)
- ✶ உயிரியல் தொழில்நுட்பம் (இளநிலை விஞ்ஞானம்)
- ✶ உயிரியல் தொழில்நுட்பம் (முதுநிலை விஞ்ஞானம்)
- ✶ வணிக முகாமைத்துவத்தில் இளமாணி (B.B.A.)

தற்போது கல்லூரியின் தலைவரும் உபதலைவரும் கொழும்பில் உள்ளனர்.

முன்பதிவுகளுக்கு தொடர்புகொள்ளவும்:

**S.SRIKARAN - 0777 575740**
**Office - 01 2541278**

*தொடர்பு முகவரி:*

**29, Somasundaram Avenue,**
**Chundikuli.**

(21742) (24-14-16)

# விமானக் கடத்தலுக்கு தீவிரவாதிகள் இனி மிளகுத்தூள், சீப்பு, 'பெல்ட்' பயன்படுத்துவர்

**2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நினைவுகூரும் விதத்தில் மீண்டும் தாக்குதல்களை மேற்கொள்ளப் பயங்கரவாதிகள் திட்டமிடுவதாக அமெரிக்காவின் புலனாய்வுத்துறை தெரிவிக்கிறது. அது பற்றிய தகவல்களைத் திரட்டித் தருகிறோம்.**

முழு உலகையும் அதிரவைத்த - அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட - உலக வர்த்தகமையத் தாக்குதல் இடம்பெற்று எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதியன்று இரண்டு ஆண்டுகளாகிறது. இத்தினம் நினைவுகூரத்தக்க ஒன்றாக இல்லாவிடினும் அதிகரித்துவரும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் இந்தத் திகதியை அடிக்கடி நினைவூட்டுகின்றன.

இத்தாக்குதல் இடம்பெற்று இரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகளை இலக்காகக் கொண்டு, மேலும் பல பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறுமென அல்கெய்டா அமைப்பு ஏற்கனவே பல முன்னெச்சரிக்கைகளை விடுத்துள்ளது. எவ்வகையில் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெறக்கூடும் எனப் பரவலாக அலசப்பட்டு வரும் நிலையில், அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் இத்தாக்குதல்கள் எவ்வகையில் இடம்பெறக்கூடும் என்பது குறித்து சில அனுமானங்களைத் தெரிவித்துள்ளனர்.

அன்றாடம் பாவிக்கும் சாதாரணமான பொருள்களைப் பயன்படுத்தி விமானக் கடத்தலொன்றை மேற்கொள்ளப் பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது. இது சம்பந்தமாகப் பாதுகாப்பு அதிகாரிகள் மிக அவதானத்துடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை, புலனாய்வுப் பிரிவு வலியுறுத்தியுள்ளது. இடுப்புப்பட்டி முதற்கொண்டு திறப்புகள் வரையிலான சிறு சிறு பொருள்களைக் கொண்டு இரகசியமான முறையில் பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதே அல்கெய்டாவின் நோக்காகவுள்ளது என்று புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இத்தகைய பொருள்களில் அநேகமானவை 20 அமெரிக்க டொலர்களை விடவும் குறைவான பெறுமதி கொண்டவை என்பதோடு, இவற்றில் சில பொருள்கள் விமான நிலையங்களில் அமைக்கப்பெற்றுள்ள கண்காணிப்பு சாதனங்களின் திரைகளில் பிரதியளிக்கமாட்டா எனத்தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதல்கள் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படலாமெனக் கருதும் பொருள்களடங்கிய பட்டியலொன்றை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு அண்மையில் வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் இத்தகைய செயற்பாடுகளை தோற்கடிக்கும் நோக்கில் முக்கிய விமான நிலையங்களுக்கு மேற்படி விவரப்பட்டியலடங்கியுள்ள ஒளிப்பதிவுத் தட்டுக்களை விநியோகிக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுத்துறை கூறியுள்ளது.

விமான நிலைய அதிகாரிகளை உஷார்படுத்துமுகமாகவே இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டதாக, அப்பிரிவின் பேச்சாளர், போல் பிரேசன் தெரிவித்தார். பயங்கரமான இரசாயன வாயுவைப் பயன்படுத்துவதன் மூலம் இத்தாக்குதலை மேற்கொள்ள அல்கெய்டா அமைப்பு திட்டமிட்டிருந்ததாக, இதற்கு முன்னர் புலனாய்வுப் பிரிவு எச்சரித்திருந்தது.

மிகச்சிறிய அமைப்பினைக் கொண்டுள்ள கத்திகளைக் கையாண்டு அல்லது மிளகுத்தூளை வீசி தாக்குதல் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. இத்தகைய பொருள்களை அமெரிக்கா, தாய்வான், ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை இப்பயங்கரவாதிகள் மேற்கொண்டிருந்ததாகவும் தெளிவாகியுள்ளது.

**- சரவணன் -**






பயங்கரவாதிகளின் புதிய திட்டத்தின் பிரகாரம் அவர்கள் பயன்படுத்தக்கூடும் எனக் கருதப்படும் பொருள்களில் இடைப்பட்டி, சீப்பு, சிகரெட் லைற்றர்கள், சிலுவைச்சின்னம், மூடப்பட்ட உதட்டுச்சாயச் சாதனம், கொள்கலன் வகைகள், குடைகள், பேனாக்கள் மற்றும் போலிக்கடன் அட்டை போன்ற சிறிய பொருள்கள் அடங்கியுள்ளன. இவைகளில் அநேகமானவை நான்கு அங்குலத்திற்கும் குறைவான அளவைக் கொண்டவையாகும். இவைகளிற் சில, தாக்குதல் நடவடிக்கைகளுக்கு மிகப் பொருத்தமானவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

விமானப் பயணிகளிடமிருந்து பலவந்தமாக மேலும் பலவற்றை பெற்றுக்கொள்வதே பயங்கரவாதிகளின் திட்டத்தின் மற்றுமோர் அங்கம் எனவும் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக் காட்டியுள்ளனர். 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் தாக்குதல்களுக்கான விமானங்கள் இத்தகைய பொருள்களைப் பயன்படுத்தியே கடத்தப்பட்டிருந்தன. இவ்வாறான தந்திரங்களை மீண்டும் மேற்கொள்வதைத் தடுப்பதற்கு விமான நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

புலனாய்வுப் பிரிவின் கூற்றின்படி இத்தகைய பொருள்கள் சக்திவாய்ந்த ஆயுதங்களை விடவும் பயங்கரமான விளைவுகள் கொண்டனவாக அமையலாம்.

விமானப் பயணிகள் தம்வசமுள்ள செல்லிடத் தொலைபேசி மற்றும் புகைப்படக்கருவி போன்றவை சம்பந்தமாக மிக அவதானமாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் புலனாய்வுப் பிரிவு வலியுறுத்தியுள்ளது. பயங்கரவாதிகள் இத்தகைய பொருள்களின் ஊடாகவும் தாக்குதல் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடுமென்பதும் புலனாய்வுப் பிரிவின் அனுமானமாகும்.

அவ்வாறான தாக்குதல் முறைகளைத் தடுக்கும் விதத்தில் அமெரிக்க அரசு ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்றாக, அமெரிக்கா ஊடாகப் பயணம் மேற்கொள்ளவுள்ள விமானப் பயணிகளும் அமெரிக்காவுக்கான விஸாவினைப் பெற்றிருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எவவாறாயினும், நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ள பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர் நடவடிக்கைகளைத் தோல்வியுறச் செய்யுமுகமான திட்டங்களையும் பயங்கரவாதிகள் கைக்கொண்டமை கடந்த கால நிகழ்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. தீர்வுக்கெட்டாத ஒன்றாக நீண்டு செல்லும் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதாயின் அதற்கேதுவாக அமையும் காரணிகளை ஆராய்ந்தறிந்து, அதற்கான தீர்வைத் தேட முனைவது மிக முக்கியமான ஒன்றாகும்.

# கிழக்கு மாகாண கொலைகளுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளே காரணம்

## மட்டு. அம்பாறை பொறுப்பாளர் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் கொலைசெய்யப்படுவதற்கு சமாதானத்தை விரும்பாத சில தீய முஸ்லிம் அரசியல்வாதிகளே காரணம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்பாகவும் அதன் பயனாக தமிழ் - முஸ்லிம் மக்களிடையே தோன்றியுள்ள முறுகல் நிலை குறித்தும் சர்வதேச செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே கௌசல்யன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள இன நல்லுறவைச் சிதைக்கும் நோக்கிலேயே இத்தகைய படுகொலைகளை மேற்கொள்கின்றன.

முஸ்லிம் அரசியல்வாதிகளின் திட்டமிடப்பட்ட செயற்பாடாகவே இதனை நாம் கருதுகின்றோம். ஏனெனில், இன்று பல இடங்களில் பல கொலைகள் இடம்பெற்று வருகின்றன. அவற்றிக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நீதி விசாரணைகள் மூலம் நீதி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், கிழக்கு பகுதியில் இடம்பெறும் படுகொலைகள் அனைத்தையும விடுதலைப் புலிகளே மேற்கொள்வதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. நாம் ஒருபோதும் இத்தகைய படுகொலைகளை மேற்கொள்ளவிலலை. இத்தகைய படுகொலைகளை மேற்கொள்வதற்கு எமது தேசியத் தலைவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்.

நாம் இப்போது பலம்வாய்ந்த ஓர் இராணுவ அமைப்பாக விளங்குகின்றோம். இந்த நிலையில் எவரையும் படுகொலை செய்யவோ அன்றி பழிவாங்க வேண்டிய தேவைகளோ எமக்குக் கிடையாது.

தமிழ் - முஸ்லிம் மக்கள் இடையே இன நல்லுறவு கட்டி வளர்க்கப்பட வேண்டும். இவ்விரு சமூகத்தினரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக நிற்பதன் மூலமே எமது சுதந்திரத்தைப் பெற்றுகொள்ள முடியும். இந்தவகையில் இரு சமூகங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்த நல்லுறவைப் பேணுவதற்கு நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம்.

அந்த அடிப்படையில் முஸ்லிம்களின் கொலைகளுக்கும் எமக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்கள் பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்கான அரசியல் இலாபம் கருதி தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கலவரங்களை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவே நாம் இதனைக் கருதுகின்றோம்.

பேரினவாத சக்திகள் நன்கு திட்டமிட்ட வகையில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே விரிசலை ஏற்படுத்துவதற்கு செயற்பட்டு வருகின்றன.

இத்தருணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மிகவும் விழிப்பாகவும், தெளிவாகவும் இருந்து இத்தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு துணைபோகாமல் செயற்பட்டு தமக்கு வேண்டிய பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என நாம் அன்பான வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரசிற்கும் எமது அமைப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள ஆயுதக் குழுக்கள், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதம் நிறைவடைந்த பின்னர் இப்பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாடமுடியாது.

ஆனால், அக்குழுக்கள் அதனையும் மீறி ஆயுதங்களுடன் தற்போதும் நடமாடுவதால் அவர்களும் படுகொலைகளைச் செய்த பின்னர் அப்பழியை எம்மீது சுமத்த எத்தனிக்கின்றனர்.

அதேவேளை - முன்பு சுகபோகம், இலாபம் சம்பாதித்த அரசியல் கட்சிகள் இத்தகைய சுபோகங்கள் கிடையாத நேரங்களில் அவர்களுக்கிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள் ஊடாக தமது உறுப்பினர்களை அவர்களே படுகொலை செய்யும் சூழ்நிலையும் காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் மற்றும் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் மட்டும் படுகொலை செய்யப்படவில்லை. எமது அமைப்பைச் சேர்ந்த சிலரும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு இருந்தும் கூட நாம் பொறுமையாக இருந்து இக்கொலைகளின் சூத்திரதாரிகள் யார் என்று கண்டுபிடிக்கும் பொருட்டு தவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே, கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் படுகொலைகளுக்கு எம் மீது வீண்குற்றம் சுமத்துவதை விடுத்து இக்கொலைகளுள் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் - என்று கௌசல்யன் மேலும் தெரிவித்தார்.

(ஒ-5)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு விசேடமாக ஆங்கிலம் போதனை

## கல்வி அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.23

பாடசாலைகளில் ஆங்கில மொழியின் தரத்தை உயர்த்தவும், ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் போதனையை மேற்கொள்ளவும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

உலக வங்கியின் ஒத்துழைப்புடன் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சின் பொதுக் கல்வித்திட்டம் இரண்டின்கீழ் ஆசிரியர்களுக்கு கல்வி வழங்கல் நடைமுறையின்கீழ் நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில் கற்பித்துவரும் 12 ஆயிரம் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு ஆங்கில போதனையை மேற்கொள்ள கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவென உலக வங்கி 700 மில்லியன் ரூபா கடனாக வழங்கியுள்ளதாகவும் -

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை இத்திட்டத்தின்மூலம் ஆங்கில போதனையை மேற்கொள்ளவும் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் - தெரியவருகின்றது.

எதிர்காலத்தில் ஐந்தாம் தரம் வரை கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே அந்தந்த வகுப்புகளில் ஆங்கில பாடத்தைப் போதிக்கவும், ஆங்கில ஆசிரியர்களின் தொழில்திறனை அதிகரிக்கவும், பாடசாலைகளில் ஆங்கில போதனையை வலுப்படுத்தவும் நோக்காகக் கொண்டு இத்திட்டத்தை கல்வி அமைச்சு மேற்கொள்ளவிருக்கின்றது.

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒரு பாடநெறியும், தரம் 5 முதல் 11 வரையான வகுப்பு ஆசிரியர்களுக்கு மற்றொரு பாடநெறியும், தரம் 12, 13 (உயர்தர வகுப்பு)களுக்கென பிறிதொரு பாடநெறியும், கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு இன்னொரு பாடநெறியும் என மொத்தம் நான்கு வகைகளில் பாடத்திட்டங்களைக் கற்பிக்கவும் -

வலயக் கல்விப் பணிப்பாளர்களூடாக இவற்றுக்குரிய ஆசிரியர்களைத் தெரிவுசெய்து 18 மாதங்கள் வரை பயிற்சியளிக்கவும் - கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள விருப்பதாகவும் அறிவிக்கப்படுள்ளது.

(எ-152)

# மக்களுடன் நெருக்கமான உறவுகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேவை

## உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.23

வாக்குப் போடுவது தொடக்கம் ஒருவரின் வாழ்நாள் வரைக்கும் அவருடன் தொடர்புகொண்டு அவருக்கு தேவையான பணிகளையும் சேவைகளையும் மேற்கொண்டு வருபவை உள்ளூராட்சி மன்றங்கள். அவை, மக்களுடன் நெருக்கமான உறவைப் பேணி செயற்படவேண்டும்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி மேற்கண்டவாறு கூறினார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக திறந்த வெளியரங்கில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தமது உரையில் மேலும் கூறியதாவது:-

உள்ளூராட்சி ஊழியர்களின் செயற்பாடுகளும், சனசமூக நிலையங்கள், முன்பள்ளி நிலையங்கள் என்பவைற்றின் ஒத்துழைப்புமே உள்ளூராட்சி வார கொண்டாட்டங்களை சிறப்புற நடத்த உதவின.

மக்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள், மக்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட அமைப்பாகவே விளங்குகின்றன; மனம், மொழி, மெய்களின் செயற்பாடுகளால் நல்ல பணியாற்றி நல்ல பயன்பாட்டை தோற்றுவிக்கின்றன.

அத்துடன் மக்களின் சுகாதாரம், கல்வி, கலை, கலாசாரங்களை பேணி அவற்றை வளர்ப்பதற்கு இவை உறுதுணையாக இருக்கின்றன. கர்ப்பிணிப் பெண்கள், சிசுக்களுக்கான சத்துணவு போன்றவற்றை வழங்கி, மக்களின் இறுதி செல்லிடமான மயானத்தை பேணி வருவது வரையான பல பணிகளில் உள்ளூராட்சி மன்றங்கள் ஈடுபட்டு வருகின்றன.

மக்களுடைய நலன்களைப்பேணி வரும் இம்மன்றங்கள் மேலும் சிறப்புடன் செயலாற்ற, மக்கள் அக்கறையுடன் இணைந்து செயற்படவேண்டும் -என்றார். (எ-152)

# பயஸ் உடல் நிலை தேற்றம்

மூளைத் திசுக்கள் பாதிக்கப்பட்டு அமெரிக்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ், நலமாக இருக்கிறார் என டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

பயஸின் உடல்நலம் பற்றி அண்டர்சன் வைத்தியசாலையின் தலைமை நிர்வாக அதிகாரி கிளாரென்ஸ் பிரவுன் கூறுகையில்,

"லியாண்டர் தற்போது நலமாக இருக்கிறார். ஒழுங்காக உடற்பயிற்சிகள், யோகா செய்கிறார். அவருக்கு என்ன பிரச்சினை என்பதை, மருத்துவப் பரிசோதனை முடிவுகள் வந்த பிறகுதான் கண்டுபிடிக்கமுடியும். அனேகமாக, மூளைப் பகுதியில் கிருமித்தொற்று இருக்கலாம் என்று நினைக்கின்றோம். அப்படி இருந்தால், நோய் எதிர்ப்பு மருந்துகள் கொடுத்து வெகுவிரைவில் அவரைக் குணப்படுத்திவிடலாம்" என்றார்.

### போட்டி ஒத்திவைப்பு

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக 44 ஆம் ஆண்டு விழாவினை ஒட்டி இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடத்தப்படவிருந்த விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டி நடைபெறும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் அறியத்தந்துள்ளார்.

# சென்றலைட்ஸ் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் டொனால் கணேசகுமார் ஞாபகார்த்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று 9.30 மணி முதல் ஆரம்பமாகும் ஆட்டங்கள் இடம்பெறும் மைதானங்கள் மற்றும் பங்கேற்கும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

★ யாழ். மத்திய கல்லூரி மைதானம் - சென்றலைட்ஸ் (சொக்ஸ்) எதிர் பல்கலைக்கழகம்

★ சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் - கொக்குவில் (பி) எதிர் ஸ்ரான்லி,

★ சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம் - ஜொனியன்ஸ் எதிர் மானிப்பாய் பரீஸ்.

### பட்மின்ரன்

யாழ். மாவட்ட பட்மின்ரன் சங்கம் நடத்தும் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான பட்மின்ரன் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

### கிரிக்கெட்

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் பிரவுண் அன்ட் கம்பனியின் அனுசரணையுடன் நடத்தும் ஆறுபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

# திருவாவடுதுறை சுவாமிகள் இருநாள் யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.23

திருவாவடுதுறை ஆதீன 23ஆவது குருமகா சன்னிதானம் சிவப்பிரகாச தேசிய பரமாச்சார்ய சுவாமிகள் இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். வரும் இவர், நல்லைக்கந்தன் தேர் உற்சவத்தில் பங்குபற்றுவார்.

சுவாமிகளுக்கு 25 ஆம் திகதி காலை நல்லை ஆதீனத்தில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கின்றது. இந்நிகழ்வில் சுவாமிகளின் அருளுரையும் இடம்பெறவிருக்கின்றது.

அன்று பிற்பகல் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் தரிசனம் செய்யும் சுவாமிகள் அங்கு அருளுரை வழங்குவார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், செல்வச்சந்நிதி ஆலயம், வல்வெட்டித்துறை சிவன் ஆலயம், வல்லிபுர ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று சுவாமிகள் தரிசனம் செய்வார். (ஒ-3)

### தேவாலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.23

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்த சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயம், தற்போது புனரமைக்கப்படுகின்றது.

கடந்த 7 ஆண்டுகளாக யுத்தத்தினால் இடிபாடுகளுடன் காணப்பட்ட இத்தேவாலயம் தற்போது பங்கு மக்களின் பணத்தினைக் கொண்டு புனரமைக்கப்படுகிறது. (ஒ-6-15)

### ஆச்சிரமத்தில் பணி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,ஓக.23

வதிரி ஸ்ரீ பரமானந்த சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமத்தில் உள்ள கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பெண் மேற்பார்வையாளர், சமையலாளர்கள் (ஆண், பெண்), காவலாளி, அறநெறிப் பாடசாலை ஆசிரியை, பெண்கள் முதியோர் உதவியாளர் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகும் விண்ணப்பம் செய்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 30ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# கேணல் தர அதிகாரிக்கு மரண தண்டனை விதிப்பு

கொழும்பு,ஓக.23

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த கேணல் தர அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

றோஹணநிமால் கஸ்தூரி ஆராய்ச்சி என்ற அதிகாரிக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா நேற்றுமுன்தினம் இந்தத் தண்டனையை விதித்தார்.

மீரிஹான பொலீஸ் நிலையத்தில் வைத்து பொலீஸ் அதிகாரி ஒருவரிடமிருந்து துப்பாக்கியை அபகரித்துச் சென்று ஒருவரை கொலை செய்த சம்பவத்திற்காகவே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது. (ஒ-5)


## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை குணரத்தினம் (குணம்)

கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குணரத்தினம் 20.08.2003 புதன்கிழமை கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும், சந்திரசேகரம் (கனடா), மதனகலா, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தினி (கனடா), ஜெகதீஸ்வரன் (கண்ணன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் பரிபூரணம், இராசரத்தினம் காலஞ்சென்ற சிவஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்சிகன் (கனடா), ரிஷாந் (கனடா), விதூர்ணன் (கனடா), தனோஜன், தர்சன், அனுசன், தவர்ஜனா ஆகியோரின் அன்புப் பேரனும் மயில்வாகனம் - புவனேஸ்வரி தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
.மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (21755) (31-12-17)



**விற்பனையாகின்றது!**

சமூகசேவை, கிராம அபிவிருத்தி, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போட்டிப் பரீட்சைக்கேற்ற வழிகாட்டி

## பொது அறிவு

(புதிய வெளியீடு)
ஆக்கம்: திரு.வே.தபேந்திரன் (B.Com.)

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நல்லூர்க்கந்தன் உற்சவகாலக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(நல்லூர் சிவாலயம் முன்பாக)
☎ 222 2573.
(C/29716) (25-12-17-31)



## கொக்குவிலில்.....
## NET CAFE

இன்று முதல்!
பிற்பகல் 3.30 மணியிலிருந்து ஆரம்பமாகின்றது.
(மணித்தியாலயத்திற்கு ரூபா : 50 மட்டும்)

வெளிநாட்டு அழைப்புகளுக்கு ரூ. 8/-

எம்மிடம்
- கொம்பியூட்டர் ரைப்பிங்
- போட்டோ பிரதி
- பக்ஸ்
- அனைத்து வாழ்த்து மடல்களும்

குளிரூட்டப்பெற்ற குதூகல சேவைக்கு :
நாடுங்கள்: கணேசன் கொமினிக்கேஷன்ஸ்
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
☎ 222 2585
222 3423.
(21756)(31-12-17)



## பரத நாட்டிய அரங்கேற்ற அழைப்பு

C/29708

அன்புடையீர்,
எங்கள் செல்வப் புதல்வியும், திருமறைக்கலா மன்ற மாணவியும், **நுண்கலைமாணி நாட்டியக்கலாவித்தகர் ஸ்ரீமதி ஆனந்த ஜோதி தர்ஷனன்** அவர்களின் மாணவியுமாகிய
**செல்வி தர்மினி எட்வேட்பிறேமகுமாரன்**
அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் ஆவணி மாதம் 24ஆம் திகதி நாளை (24-08-2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருப்பதால், தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும்,
திரு. திருமதி எட்வேட் பிறேமகுமாரன்
18, சென்ஜேம்ஸ் கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.




UTHAYAN Graphics

# யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட எம்.பி.பி.எஸ். பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.23

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட எம்.பி.பி.எஸ். இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இரண்டாம் வகுப்பு - மேற்பிரிவில் 4 பேரும், இரண்டாம் வகுப்பு - கீழ்ப்பிரிவில் 25 பேரும், 49 பேர் சாதாரண சித்தி யும் பெற்றுள்ளனர். முதலாம் வகுப்பில் எவரும் சித்தியெய்தவில்லை. சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:-

★ இரண்டாம் வகுப்பில் (மேற்பிரிவு) சித்தியடைந்தோர்.

எஸ்.பிரியதர்சினி, றெஜினோல்ட் குநாதன், கே.சுயநிதா, கே.சிவாஜினி.

★ இரண்டாம் வகுப்பில் (கீழ்ப்பிரிவு) சித்தியடைந்தோர்.

ஏ.அஜந்தா, எஸ்.அந்தோனியா, ரி.பீஷ்மன், ஐ.டினேஸ் அலோசியஸ், எஸ்.கவிதா -

ரி.பிரபா, ஜி.ஜோசப் பிரதீபன், ரி.சிவாஜினி, எம்.ஸ்ரீலக்ஸாஜினி, ஜி.ஸ்ரீராம் -

என்.சுபாசினி, எஸ்.சுரேஸ், ரி.சுவேதனன், ஏ.ஜோன்கீத், யு.மயூரதன் -

எஸ்.இளங்கோ, பி.கல்யாணி, எஸ்.கஸ்தூரி, ஆர்.ரட்ணரஞ்சித், எஸ்.ஜெயசுதா -

எஸ்.ரிஷிகேசவன், எம்.செந்தூரன், எஸ்.சிவகாந்தன், கே.தமிழரசி, ரி.பாஸ்கரன் -

★ சாதாரண சித்தியடைந்தோர்.

கே.கோபாலன், யே.குணதீபன், என்.ஜெயந்தன், எம்.ஜோய் ஜேசுதாஸ், எஸ்.கஜனா -

கே.கிருபாகரன், வி.நந்தினி, எம்.நவநீதரன், ரி.சசிதரன், ரி.சிவலிங்கம் -

பி.சுரேஸ்மோகன், எஸ்.சுதர்சன், ஏ.சுதர்சினி, பி.தாரணி, ஏ.திலீபன் -

ரி.திருவரங்க ஜனனி, ரி.திருமுருகன், எஸ்.துரைசாமி சர்மா, ரி.யாழினி, எஸ்.சிவதாசன் -

என்.ராஜேஸ்கண்ணன், எஸ்.பகீரதி, ஆர்.வரதன், ரி.குமணன், வி.ஜேக்கப்ஸன், பி.அமல்தினேஸ் கூஞ்ஜே, ஏ.தயாசீலன், வி.குகேந்திரன், எஸ்.அகிலன், கே.அருட்சோதி-

பி.லோகநாதன், ஜி.பாமதி, வி.தேவரஜனி, எஸ்.பத்மரஞ்சினி, ரி.வத்சலா -

ஜி.மகாலக்ஸ்மி, கே.கிறிஸ்ரினா செல்வநாயகி, எம்.யோகராணி, கே.சந்திரபிரபா -

எஸ்.பூங்கோதை, ஏ.கவிதாசினி, ஆர்.ரமேஸ், வை.தர்மேந்திரா, ஆர்.கதிர்ச்செல்வன் -

ஆர்.சதானந்தன், வி.சண்முகராசா, எஸ்.லவன், வி.வத்சலா, எஸ்.உமாசுதன்

(எ-10)


கிராம, அபிவிருத்தி உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்

பொது அறிவு நுண்ணறிவு எதிர்பார்க்கும் வினாக்கள்

BY.P.கமலதாசன்

-உயர்கல்விச் சேவை

பூபாலசிங்கம் புத்தகசாலை.

(21751) (29-12-17-31)



BAJAJ THREE WHEELER
(BRAND NEW)
IMMEDIATE - SALE
- Contact -
R.SURESH
250, KANDY ROAD,
JAFFNA.


## மினிபஸ் தடம்புரண்டதில் இருவர் காயம்!

தென்மராட்சி,ஓக.23

முகமாலையிலிருந்து பயணிகளுடன் வந்த மினிபஸ் எழுதுமட்டுவாள், ஆசைப்பிள்ளை எற்றத்தடியில் தடம்புரண்டதில் அதில்வந்த பயணிகள் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்த இருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மானிப்பாய் ஆனந்தா வீதியைச் சேர்ந்த கோவிந்தன் இராசலிங்கம் (வயது-64), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி.சுரேஸ் (வயது-24) ஆகியோரே இவ்வாறு காயமடைந்தவர்களாவர்.

இவர்களில் கோ.இராசலிங்கம் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எ-117)

## திருப்பெருந்துறையில் இன்று முதல் திங்கள் வரை 'மக்கள் எழுச்சி சங்கமம்'

தமிழீழ விடுதலைப் புலிகள், மட்டக்களப்பு மாவட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகள், திருப்பெரும்துறை கிராம பொதுமக்கள் ஆகியோர் இணைந்து மக்கள் எழுச்சிச் சங்கம நிகழ்வொன்றை நடத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை திருப்பெருந்துறையில் மட்டக்களப்பு நகர புலிகளின் கோட்ட அரசியல் பொறுப்பாளர் சேனாதி தலைமையில் நடைபெறும்.

இன்று சனிக்கிழமை இடம்பெறும் முதலாம் நாள் நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.புண்ணியமூர்த்தி, தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் துணை அரசியல் பொறுப்பாளர் கிருஷன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளைய நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் பலர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திங்கட்கிழமை இடம்பெறும் இறுதி நாள் நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி கலந்துகொள்ளவுள்ளார். விளையாட்டுப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

## நெல்லுக்கு ரூ.13.50 உத்தரவாத விலை யூரியா விலை குறைப்புக்கும் இணக்கம்

ஒரு கிலோ நெல்லை 13ரூபா 50 சதப்படி உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதென அரசு தீர்மானித்திருக்கிறது.

யூரியா பசளை விலையை 50 சதவீதத்தால் குறைக்கவும் நெல் ஆலை உரிமையாளர்களின் வங்கிக் கடன்கள் அறவிடப்படுவதை அடுத்த ஆண்டு ஏப்ரல்வரை பின்போடவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் பொலநறுவை மாவட்ட விவசாயிகள் அமைப்புடன் அமைச்சர்கள் சிலர் நடத்திய கூட்டமொன்றில் இத்தீர்மானம் குறித்து தெரிவிக்கப்பட்டது.

இந்த அமைப்பு ஏற்கனவே பத்துக் கோரிக்கைகளை பிரதமரிடம் சமர்ப்பித்திருந்தது. அமைச்சர்களான கரு ஜெயசூரிய, பந்துல குணவர்த்தன, ஹேமகுமார நாணயக்கார ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பொலநறுவை மாவட்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவிற்கு 50 கோடி ரூபா உடனடியாக ஒதுக்குவதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.


தவறிவிட்டது

கடந்த (01.08.2003) வெள்ளிக்கிழமை நெல்லியடி காளிகோயிலுக்கு அருகாக வதிரிச்சந்தி ஊடாக, வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் செல்லும் வீதியில் 17 பவுண் தாலிக்கொடி தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

க. தங்கவடிவேல்,
நெல்லியடி ம.ம.வித்தியாலய வீதி, காளி கோயிலடி,
நெல்லியடி, கரவெட்டி.

(சி-29728) (31-12-17) T.P: 077-6071133.



காலநடை வைத்திய சேவை

கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி, யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய பணிமனை மூலம் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் கால்நடை வைத்திய சேவை கீழ்வரும் தினங்களில் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

1. திங்கள்
2. செவ்வாய்
3. வியாழன்
4. வெள்ளி

இந்த இலவச வைத்தியசேவையைப்பெற்று பயனடையும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பெயர்:- டாக்டர் (திருமதி)
வ.அமிர்தலிங்கம்
கால்நடை வைத்தியர்,
யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுசங்கம் (வ.து.)

(C/29730) (29-12-17-31)



ஒறிஜினல் யப்பான் NTN போல் பியறிங், றோலர் பியறிங் (றேசர் வகைகள்)
யாழ். நகரில் பெற்றுக்கொள்ள ஒரே இடம்
கே.வைத்தியலிங்கம் சக நிறுவனம்
38,40, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.
ஏக இறக்குமதியாளர்கள் :
NTN BEARINGS
கொன்சலிடேற்றட் பியறிங் அன் சப்பிளை லிமிடெட்
இல. 29, பிறிஸ்டல் வீதி, கொழும்பு - 01.
(சி-29704) (31-12-17)



இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல் பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய்ப் பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி : (31-12-17)

Dr.நவனீதன் DYNS. SMP.NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ்.பயணியர் விடுதி,
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

யோகாசன CDகளை பெற்றுக் கொள்ளலாம்.

(19468)

முகாம் நடைபெறும் நாள்கள்:
ஓகஸ்ட் 23ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை.



எமது ஓடியோ CD வெளியீடு
வீரமணி ராஜீ பாடிய
★"திருக்குறள்"
(அதிகாரம் 1 - 133 வரை)
நரேன் வீடியோ சென்ரர்
140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-29717)(31-12-17)



லஷ்சுமி சினிமா இணுவில்
அல்டிமேட் ஸ்டார்
அஜித், சாருகான் மற்றும் பலர் நடிப்பில்
சாம்றாட் அசோகா (ரீல்ஸ்)
(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)
காட்சி நேரம் 11.00, 2.00, 7.00 (புதிய நேரம்).
(21761)



நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த
மனசெல்லாம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
JUDGE & JURY
இரவு 8.45 இற்கு.
(C29213) (31-12-17)



நாகம்ஸ் சுன்னாகம்
சத்தியராஜ், ரம்பா, கபாலி, செந்தில் நடித்த
மில்றறி
காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00
(31-12-17) (C29232)



ராஜா யாழ்ப்பாணம்
எதிர்வரும் 28ஆம் திகதி வரை
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.
விஜயகாந்த், கிரண், விவேக் நடித்த

தென்னவன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C29233)



லிபேட்டி அச்சுவேலி
இன்று முதல்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீல்ஸ்)
தினசரி காட்சி: 3.00, 7.00
காலை 11.00 Red Scorpion


# மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து காசிப்பிள்ளை

தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் கொண்டலடி விநாயகர் கோயிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து காசிப்பிள்ளை நேற்று 22.08.2003 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் நாகரத்தினம் (ராசனக்கா) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரம் (இக்கன் - பிரான்ஸ்), இந்திராணி (இந்தியா), குணசேகரம் (மலை - U.K.), ஞானராணி, சற்குணராணி, வசந்தராணி, பத்மராணி, காலஞ்சென்ற ஞானசேகரம் (சூரி) மற்றும் உதயராணி (இந்தியா), யோகராணி (U.K.) ஆகியோரின் அன்புத் தகப்பனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*532 (214), கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பொ.குணவேந்திரன் (மருமகன்).

(சி-29729)(31-12-17)

### சதாசிவம் சொக்கலிங்கம் (நாயன்மார்கட்டு)

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சொக்கலிங்கம் நேற்று (2003.08.22) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற நமசிவாயம் - பொன்னாச்சியின் மருமகனும் நாகம்மாவின் அன்புக்கணவரும் தர்மகுலசிங்கம் (ஆசிரியர், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), கோபாலசிங்கம் (பிரான்ஸ்), ஜெயவீரசிங்கம் (ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை), மன்மதராஜலிங்கம் (M.S.O, யாழ். தபாலகம்), புண்ணியசிங்கம் (இந்தியா), விஜயசிங்கம் (ஊழியர், எக்ஸ்போ விமான சேவை), குமாரசிங்கம் (யாழ். மாநகரசபை), குணசிங்கம் (யாழ். மாநகரசபை), கலைவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகிர்தராணி, மங்களேஸ்வரி, சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் (அதிபர், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), புஸ்பமதி, தயாநிதி (இந்தியா), சிவரஞ்சிதம், நிரஞ்சனாதேவி, மேகலா குணசிங்கம் (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), சிவயோகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் மோகனதாஸ் (கனடா), கஜேந்திரதாஸ், கிருஷ்ணதாஸ், சுதாஷினி, நிர்மலதாஸ், சர்மிலன் (பிரான்ஸ்), பிரசாத், வினோத், காயத்திரி, மாதங்கி, மதுஷன், சாம்பவி, விதுஷன், பிரியங்கா (இந்தியா), ராகுல் (இந்தியா), லக்ஷன் (இந்தியா), விஸ்னுகாந், மிதுன்காந், பிரவின்காந், அஸ்வினி, சந்தியன் (லண்டன்), அனுச்சிகா (லண்டன்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சின்னம்மா, சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற ஊழியர் யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*96, இராஜேஸ்வரி வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சொ.தர்மகுலசிங்கம் (மகன்).

(21762)(31-12-17)

# சாய்ந்த மருதுவில் நேற்று ஆர்ப்பாட்டம்; ஊர்வலம் செல்வதை பொலீஸார் தடுத்தனர்!

## பெருமளவில் பொலீஸார் குவிப்பு: 2 மணியுடன் ஊரடங்கு

அக்கரைப்பற்று,ஓக.23

கிழக்கு மாகாணத்தில் இனந்தெரியாத ஆயுதக்குழுக்களால் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை, ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களுக்கு எதிராக நேற்று சாய்ந்தமருதுவில் ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பதாகைகளுடன் ஊர்வலமாக முன்னேறிச் செல்ல முயன்றபோதிலும் பொலீஸாரும் விஷேட அதிரடிப் படையினரும் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற விருப்பதை முன்னரே அறிந்துகொண்ட படையினர், சாய்ந்த மருது ஜும்ஆ பள்ளிவாசலுக்கு சற்றுத் தொலைவில் தடைவேலி அமைத்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

ஜும்ஆ தொழுகையின் பின்னர் கல்முனை விடுதலைப் புலிகள் காரியாலயத்துக்கு ஊர்வலமாகச் செல்ல நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் செய்தோர் முன்னேறி வரவே பாதுகாப்புப்பிரிவினர் எச்சரிக்கை செய்தனர். உடனே ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளைக் கீழே போட்டுவிட்டு முண்டியடித்துக் கொண்டு சென்றனர். இளைஞர்கள் உணர்ச்சி பொங்க "அல்லாஹு அக்பர்" கோஷம் எழுப்பினர். படையினர் மீது கல்வீச்சு இடம்பெற்றது. இதனால், பொதுமக்கள் சிலர் படையினரால் தாக்கப்பட்டனர்.

திகாமடுல்ல மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா, ஆர்ப்பாட்டக்காரர்களை அமைதியாக இருக்கும்படி பள்ளிவாசல் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தார். ஆயினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லாமல் பொலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நிலைமை மோசமடையவே, முஸ்தபா எம்பி. வீதிக்கு விரைந்து பாதுகாப்புத் தரப்பினரிடமும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களிடமும் பொறுமை காக்குமாறு வேண்டினார். அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாமல் நிலைமையைச் சமாளித்தார்.

நேற்று கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - மட்டக்களப்பு வீதிகளில் பெருமளவு பொலீஸாரும், நூற்றுக்கணக்கான விஷேட அதிரடிப் படையினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று கல்முனைப் பிரதேசத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருப்பதாக பொலீஸார் அறிவித்தனர். இந்த ஊரடங்கு இன்று சனிக்கிழமை காலை 5 மணிக்கு நீக்கப்படும் எனத தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை நான்கு மணியளவில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் மயோன் முஸ்தபா எம்.பி. சமரச மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். இதில் பொலீஸ் உயரதிகாரிகள், புலிகள், கண்காணிப்புக் குழுவினர், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ள ஏற்பாடாகி இருந்தது.

ஆயினும், முஸ்தபா எம்.பி. தனியொரு கட்சியின் பிரதிநிதியாக கலந்துகொள்வதால் இக்கூட்டத்தில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று புலிகள் தெரிவித்தனர். (ம)

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலை தூரத்திலேயே அச்சமாதானம் இருந்து வருகின்றது. சமாதானம் என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறது ஐ.தே.மு. அரசு.

நாட்டுப் பற்றுள்ள எவரும் அரசின் இந்நடவடிக்கையைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள். எனவே தான், நாட்டை பாதுகாக்கும் வண்ணம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டிணையும் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றுமே தனியாக ஆட்சி அமைத்தது கிடையாது. எனது தந்தையார், தாயார், சகோதரி ஆகியோர் தனியாக நாட்டில் ஆட்சியை அமைக்கவில்லை. ஆகவேதான் இம்முறை எமது கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து மக்கள் ஆட்சியொன்றை அமைக்கவுள்ளது.

ஆட்சியை அமைத்த போது ஐக்கிய தேசிய முன்னணி அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பின்றி அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளனர்.

- இவ்வாறு கூறினார் அனுரா.

## அடுத்த மாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சி கடினமானது. சமாதான முயற்சிகள் முடிவுக்குவர நீண்ட காலம் பிடிக்கும் என்றார்.

நோர்வே தூதுவர், அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ் நிலைமை குறித்துக் கேட்டறிந்தார். யுத்த நிறுத்தக் கணகாணிப்புக் குழு அதிகாரிகளையும் அவர் சந்தித்தார். (ம-3-5)

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் உதாசீனம் செய்ததாலேயே அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான ஓட்டோ சாரதி பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மதுபோதையில் வந்து தன் மீது தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சரத் அமுனுகம இங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணம் தற்காலிகமாக ஒன்றிணைக்கப்பட்டதாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்பு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கையின் அப் போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த் தனாவே இதனை ஒப்புக்கொண்டார். ஆனால், இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதை ஏற்க மறுக்கிறார்.

வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்து இருக்கவேண்டுமென்றால், அதற்கு கிழக்கு மாகாண மக்களிடத்தில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மாத்திரமே அந்த மாகாணங்கள் இணைந்திருக்கமுடியும்

கிழக்கில் முஸ்லிம் மக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களும் கொலைகளும் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்துதான் இருக்கும் என்று கூறுவது எந்த வகையில் நியாயம்?

- இவ்வாறு சரத் அமுனுகம கேள்வி எழுப்பினார்.

## 1996இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளத்தின் கட்டளை அதிகாரி, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுக்களில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். 1996இல் யாழ்.குடாநாட்டை படையினர் கைப்பற்றிய கையோடு கைது செய்யப்பட்டவர்கள் எனக் கூறப்படும் பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் பின்னர் காணாமற்போய் விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்படிக் காணாமற் போனவர்களுள் நான்கு பேர் தொடர்பாகவே - இப்போது முதல் தடவையாக - ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3-5)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள ஹில்டன் ஹோட்டலில சிரேஷ்ட விடுதலைப் புலித் தலைவர் ஒருவர் ஊடுருவியிருப்பதால் எழுந்துள்ள தனது சொந்தப் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து கடந்த ஜூன் 27 ஆம் திகதி செய்த முறைப்பாடுகள் தொடர்பாகவே ஜனாதிபதி இக்கடிதத்தை எழுதியிருக்கிறார். பொலீஸ்மா அதிபருக்கான கடிதத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்த பிரதிப் பொலீஸ்மா அதிபர் கஜநாயக்க விசாரணைகளை மேற்கொண்டார். சில வாரங்களின் பின்னர் விசாரணை அறிக்கை எனக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அந்த அறிக்கையில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அமரசேகர கையெழுத்திட்டிருந்தார்.

பிரதிப் பொலீஸ்மா அதிபர் கஜநாயக்க என்னிடம் தெரிவித்திருந்தவற்றுக்கு முரணான சில விடயங்களே அதில் அடங்கியிருந்தன.

ஹில்டன் ஹோட்டலில் இருந்து ஜனாதிபதியின் உயிருக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது ஜனாதிபதி மாளிகையைத் தாக்கும் சாத்தியம் இல்லை என்று அந்த அறிக்கை தெரிவித்திருந்தது. உண்மை ஆதாரங்களை அந்த பொலீஸ் அறிக்கை திட்டமிட்டுத் திரித்துள்ளது என்பது தெளிவு.

கட்டுநாயக்கா விமான நிலைய சிரேஷ்ட ஆலோசகர் பதவியிலிருந்து காமினி அபேரத்னவை நீக்கும்படி நான் பாதுகாப்பு அமைச்சரைக் கோரியிருந்தேன் ஆனால், எதுவும் நடைபெறவில்லை.

இந்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் தமது கடமையில் பொலீஸாரும் பொலீஸ்மா அதிபரும், அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் முற்றாகத் தவறிவிட்டனர் என்பதை விளக்க இந்த ஓர் உதாரணம் போதுமானதாகும்.

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCS நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Diploma in Network Engineering & Netware Administration

Hardware fundamentals, Complete Lan, Wan mounting, cabling & trouble shooting. Man concepts and Trouble shooting, Telecom Interface & trouble shooting, broad band configuration, satelite interface & configuration. Software installations, Netware Installations, MsDos & Client installations(XP, windows98 installations & command), Server Installations(win2000, WindowsXP, Novell Netware, Unix installations and administrations), Netware base virus detection & cleaning, Internet interface, Configuring, rebuild & diagnostics, fault finding & trouble shooting, world wide web internet connection & trouble shooting) and etc.

பயிற்சி ஆரம்பம் 25,30.08.2003 Duration: 4 Months

Soft View Computer College

www.arammenporulagam.com Arammenporulagam@eth.net

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 2225170

Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. T.P: +91-44-4891286

Modern College of Commerce

புளியடிச் சந்தி, சாவகச்சேரி (கண்டுவில் லேன்)

A/L வணிகப் பிரிவு மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கணக்கீடு வாரத்தில் 10 மணித்தியால வகுப்புக்கள்

கணக்கீடு: T.சுதர்சன்

பொருளியல்: S.மகேந்திரம்.

Day Class புதிய பிரிவு

ஆரம்பம்: 23-08-2003

(21654) காலை 8.00 மணி (32-12-17)

ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி

A/L 2004 Day Class

ஆரம்பம்:

கலைப் பிரிவு : 22.08.03 8.00 p.m.

வர்த்தகப் பிரிவு : 22.08.03 8.00p.m.

கணிதப் பிரிவு : 23.08.03 11.00p.m.

(22-12-17) (21647)

ஆரம்பமாகிவிட்டது!

LOGIC

எஸ். எஸ். மனோகரன்

A/L DAY

செவ்., வியா.: 7.00 - 8.00 a.m.

சனி, ஞாயிறு: 10.00 - 12.00 a.m.

★ பகுதி I, பகுதி II இரண்டும் சமகாலத்தில் கற்பிக்கப்படும்.

(21684) (12-)

BEACON

யாழ்நகர் (வெலிங்டன் சந்தி).

IBMS Certificates Award Ceremoney

Date : 24th August sunday 2003 Time : 10 a.m.

Venue : J/Jaffna Hindu Ladies College

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

5வது ஆண்டில் நடைபோடுவதை முன்னிட்டு புதிய கட்டணத் திட்டத்தை முன்வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

Diploma in Business Applications (Ms Office + Iternet & Email)

Jaffna Nelliyadi Chavakachcheri

கட்டணம்: 1000/= மட்டுமே

பாடக்குறிப்புக்களுடன் கூடிய முழுமையான பாடநெறி.

Sat. Sun. :- 10:00 a.m.

Sat. Sun. :- 03:00 p.m.

Mon. Wed. :- 03:00 p.m.

(Ms Word, Ms Excel, Ms Access, Powerpoint, Internet & Email.)

ஆங்கில வகுப்பு

Mr. S. Pathmanathan (சோ.ப.)

B.A Dip. in ELT (University of Reading,UK)

Rtd. Principal, Palaly Teachers Training College.

அடிப்படையிலிருந்து முழுமையான ஆங்கிலக்கல்வி

காலம்: 6 மாதங்கள்

கட்டணம்: மாதாந்தம். 500/=

ஆரம்பம்: 02/09/03

Mon.Tue.Thu.:-03:30 p.m.

(தலைமையகத்தில் மட்டும்)






LLION AIR
லயன் ஏயர்

தினமும் காலையும் மாலையும் பாதுகாப்பான கொழும்பு விமான பயணத்திற்கு,

GENERAL SALES AGENT & HANDLING AGENT,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA.

Tel : 021 - 222 2504, 021 - 222 2823
Fax : 021 - 222 2040
அவசர தொடர்புக்கு
HOTLINE : 0777 - 382343
0722 - 401423.

(C29348) (12-17)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.